
# தமிழரசு

1.12.1994 ரூ.3



ராஷ்ட்ரீய பீஷ்மாச்சார்யா விருது - 1994


பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்
அனைத்து
காதிகிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்
DIPR No.678/DIS/93/247
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

# இந்த இதழில்...


ராஷ்டரீய பீஷ்மாச்சாரிய விருதினைப் பெற்றுக் கொண்டு மாணபுமிகு முதலவா் ஆற்றிய உரை . . . . . 2

படமும்-செய்தியும் . . . . . . . . . . . . 9

மாசுக் கட்டுப்பாடு வாரியப் புதிய கட்டடம் மாண்புமிகு முதல்வா் திறந்து வைத்தாா் . . . . . . . . 10

மாண்புமிகு முதல்வா் அவா்களின் முயற்சியால் தஞ்சை அரண்மனை வளாகம் புதுப்பொலிவு பெறுகிறது! . . . . . . 13

பாரதி - சில நினைவுகள் . . . . . . . . 15

அறநெறி முதற்று —நீதிபதி மு.மு. இஸ்மாயீல் . . . . 17

நீா்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் . . . 23

தஞ்சை தயாராகிறது! . . . . . . . . . . 24

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு: மாணவா் மலா் - பொது மலா், கட்டுரை, கவிதை, ஓவியப் போட்டிகள் முடிவுகள் . . . . . . . . 26

தமிழ் இலக்கியங்களில் உலகச் சிந்தனைகள் . . . . . . . . . . . 35

அண்ணல் அம்பேத்கா் . . . . . . . . . 41

மூதறிஞா் இராஜாஜி . . . . . . . . . 45

மாணவா் பக்கம் . . . . . . . . . . . 47


## இதழ்தோறும் ஓா் இனிய குறள்

துப்பாா்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பாா்க்குத்
துப்பாய தூஉம் மழை

* உணபவா்க்குத் தக்க உணவுப் பொருள்களை விளைவித்துத் தருவதோடு, பருகுவாா்க்குத் தானும் ஓா் உணவாக இருப்பது மழையாகும்.


**தமிழரசு**

திருவள்ளுவராண்டு: 2025

காா்த்திகைத் திங்கள்: 16

மலா்:25 இதழ்:11

1.12.1994

விலை: ரூ. 3



எட்டாவது உலகத் தமிழ் மாநாடு - தஞ்சாவூா் - 1995

யாதும் ஊரே யாவரும் கேளிா்

தமிழ் கொஞ்சும் தஞ்சைத் தரணியில்
புகழ் விஞ்சும் தமிழ் மாநாடு
புரட்சித்தலைவி
டாக்டா் ஜெ. ஜெயலலிதா
அழைக்கிறாா்

1995 சனவரி 1 முதல் 5 வரை

# “மாநில அரசுகளுக்கு வழங்க வேண்டும் பணிபுரிய நான் மத்திய அரசு அதிக அதிகாரங்கள் என்பதை வலியுறுத்தும் இயக்கத்தில் தயாராக உள்ளேன்!”

## ராஷ்ட்ரீய பீஷ்மாச்சாரிய விருதினைப் பெற்றுக் கொண்டு முதல்வர் ஆற்றிய உரை

முதல் அட்டை சொல்லும் செய்தி



**கே**ரளத்திலுள்ள திருவனந்தபுரத்தைச் சார்ந்த ‘பொன்னார ஸ்ரீதர் அறக்கட்டளை’ எனக்கு இன்று ‘ராஷ்ட்ரீய பீஷ்மாச்சாரிய’ விருது வழங்கும் இந்த இனிய விழாவில் பங்கேற்று, விருதைப் பெறுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பொன்னார ஸ்ரீதர் அறக்கட்டளை பாசத்தோடும் நேசத்தோடும் எனக்கு வழங்கும் இந்த விருதினைப் பெறுவது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

கேரளத்தைச் சேர்ந்த பொன்னார ஸ்ரீதர் அறக்கட்டளை இந்த விருதுக்காக என்னைத் தேர்ந்தெடுத்ததைப் பத்திரிக்கை வாயிலாக அறிந்தபோது ஆச்சரியமும், மகிழ்ச்சியும் அடைந்தேன்.

பொன்னார ஸ்ரீதர் அறக் கட்டளையின் சிறப்பியல்புகளையும், அது பின்பற்றும் உன்னத குறிக்கோள்களையும் நான் அறிந்த போது, இந்த விருதை ஏற்றுக் கொள்வதாக அறக்கட்டளையிடம் தெரிவித்ததில் நான் மகிழ்ச்சி அடைந்தேன். **1994**-ஆம் ஆண்டிற்கான ‘ராஷ்ட்ரீய பீஷ்மாச்சாரிய’ விருதினை எனக்கு வழங்கத் தேர்வு செய்த மைக்கான பொன்னார ஸ்ரீதர் அறக்கட்டளை யின் நிர்வாகிகளுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில், முதலில் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆழ்ந்த சிந்தனையோடு, கனிவான பரிசாக இதை எனக்கு வழங்கிய மைக்காக உங்களுக்கு என் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு இந்த விருது வழங்குகையில் மாநில, மொழித் தடைகளைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, தேசிய ஒருமைப்பாட்டை அடிப்படையாகக் கருத்தில் கொண்டே வழங்கி இருக்கிறீர்கள் என்பதை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன். இந்த விருதைப் பெற என்னைத் தேர்ந்தெடுக்கையில், இதன் அமைப்பாளர்கள் கர்ட்டிய பரந்த மனப்பான்மையினையும், தேசியக் கண்ணோட்டத்தையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

இந்தியாவின் தலைசிறந்த காவியமாகிய மகாபாரதத்தை நன்கறிந்த நமக்கு, இந்திய இதிகாசங்களிலேயே புகழ்மிக்க ஒரு மாபெரும் பாத்திரமாக பீஷ்மாச்சாரியார் இருப்பது தெரியும்; அந்த அற்புதப் பெயரைத்தான் இந்த விருது தாங்கி நிற்கிறது. உன்னதமான குணங்களின் உறைவிடமாகவும், வாழும் போதே வரலாறு ஆகவும் திகழ்ந்து உறுதியான மனத்துடன் இலட்சியங்களை அடைய விரும்புபவர்களுக்கு மகத்தான உதாரணமாகவும் திகழ்ந்த பீஷ்மாச்சாரியார் அனைவரும் வியந்து போற்றப்பட்ட மாமனிதர் ஆவார்.

உயர்ந்த இலட்சியங்களையும், உன்னத குறிக்கோள்களையும் மனதில் கொண்டு தளராத மன உறுதியுடனும், விடா முயற்சியுடனும் அவைகளைக் கடைப்பிடித்து வந்த புராணக் காலத்து ஜாம்பவான்கள் இதிகாசங்களில் நிறைய உண்டு. ஆனால், அத்தகைய ஜாம்பவான்கள் அனைவருக்கும் மேலாக, சுயநலமின்மை, கடமையுணர்வு, மகத்தான தியாகம், வீரம், ஒழுக்கத்தைக் காப்பாற்றுவதில் உறுதிப்பாடு ஆகியவற்றை அற்புதமாக வெளிப்படுத்தியதால், உயர்ந்து நின்றவர் பீஷ்மாச்சாரியார். என்னுடைய குழந்தைப் பருவத்திலிருந்தே, இராமாயணம், மகாபாரதம்



ஆகிய இரு பெறும் இதிகாசங்களை ஆர்வ மாகப் படித்து வந்திருக்கிறேன். அவற்றில் பீஷ்மாச்சாரியர் போன்றவர்களை மிகுந்த மரியாதையோடு போற்றி வந்தேன். அந்த உணர்விலே தான், இன்று, நமது கலாச்சார வரலாற்றில் மிகவும் பிரபலமான ஒருவரின் பெயரால் வழங்கப்படும் விருதினைப் பெறு வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

சிறந்த தேச பக்தரும், தீவிர விடுதலை வீரரும், உன்னதமான சமுதாயப் புரட்சி யாளரும் கேரளத்தின் மாமனிதருமான பொன்னார ஸ்ரீதர் சேவையை நினைவு கூரும் வகையில் அமைக்கப்பெற்றதொரு நிறு வனத்தால் நடத்தப்படும் இவ்விழாவில் பங்கு கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பல துறைகளில் சிறந்து விளங்கி, சமுதாயப் பணியாளராகத் திகழ்ந்த பொன்னார ஸ்ரீதர் அவர்களின் நினைவைக் கூறும் இந்த நிறு வனத்தில் இருந்து இந்த விருதினைப் பெறு வதில் நான் மிகவும் திருப்தியடைகிறேன். மிகுந்த செல்வம் செழிக்கும் குடும்பத்தில் பிறந்திருந்தாலும் அவர் மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை ஒதுக்கி. விட்டு, ஒரு சமுதாய புரட்சியாளராகவே வாழ்ந்தார் என்பதையே, அவருடைய பரபரப்பான வாழ்க்கை எடுத்துக் காட்டுகிறது. தொழிற்சங்க இயக்கத்தில் தலைமையேற்று, கேரளத்து விவசாயிகளை யும், உழைப்பாளரையும், ஆங்கிலேய ஏகாதி பத்தியத்தை எதிர்த்து ஒன்று திரட்டினார். சமூக நீதிகளைத் தைரியமாக, தனக்கு ஆங் கிலேய காவல்துறையால் இழைக்கப்பட்ட கொடுமைகளையெல்லாம் பற்றிக் கவலை கொள்ளாமல், 25 ஆண்டுக்கால சிறைவாசம் அனுபவித்த பொன்னார ஸ்ரீதர் அவர்களை நினைக்கும்போது அவர் மீது இருந்த மரி யாதை மென்மேலும் கூடுகிறது. பதவிகளைப் பற்றிக் கவலைப்படாமல் தன்னலமற்ற வாழ்க்கை வாழ்ந்து எண்ணற்ற தியாகங் களைப் புரிந்தவர் பொன்னார ஸ்ரீதர் ஆவார்.

நமது பெருமதிப்பிற்குரிய, திராவிட இயக்கத் தலைவர் தந்தை பெரியார் அவர்களுடன் ஒரு தொண்டனாக, பொன்னார ஸ்ரீதர் அவர்கள், வைக்கம் சத்தியாகிரகத்தில் பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. பொன்னார ஸ்ரீதர் போன்ற மிகச் சிறந்த சமுதாயப் புரட்சி யாளரின் சாதனைகளை நினைவு கூரும் ஒரு நிறுவனத்தினால் மதிக்கப்படுவதை நான் பெருமையாகக் கருதுகிறேன். மாபெரும் தலைவர் பொன்னார ஸ்ரீதர் அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். உன்னதமான அவரது வாழ்க்கை, பொதுவாழ்வில் ஈடு பட்டுள்ள ஒவ்வொருவருக்கும் தூண்டு கோலாக இருக்கும் என்று கருதுகிறேன்.

வறுமை, கள்ளாமை, அறியாமை ஆகியவை களை அகற்றி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நான் கொண்டுள்ள உறுதிப்பாட்டை




இந்த விருது மேலும் வலியுறுத்துகிறது.

பூகோளத்தைப் பொறுத்தவரை கேரளாவும், தமிழ்நாடும் வெவ்வேறு பகுதிகள் என்றாலும், இவ்விரு கலாச்சாரம், மனப்பான்மை, மொழி ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் பொது வான கருத்து நிலவுகிறது. தமிழ்நாட்டிற்கும், கேரளாவிற்கும், தமிழுக்கும் மலையாளத் துக்கும் இடையே உள்ள மொழி மற்றும் கலாச்சாரத் தொடர்புகள் பல நூற்றாண்டு களுக்கு முன்பே துவங்கியவை. இந்த விரு தினை எனக்கு வழங்கியதன் மூலம் கேரளத்து மக்கள், தமிழ்நாட்டின் மீதும், அதன் செழிப் பான கலாச்சாரத்தின் மீதும் கொண்டுள்ள அன்பையும், பாராட்டையும் வெளிப்படுத்து கிறது.

தமிழ்நாட்டைத் தங்களது இரண்டாவது வீடாக ஆக்கிக் கொண்ட ஆயிரக்கணக்கான மலையாளிகளுக்கு என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் கேரளத்து மக்களுக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விருதி னையும், விழாவினையும் என்றென்றும் நினைவில் வைத்திருப்பேன். மாண்புமிகு கேரள அமைச்சர்கள் திரு டி.எம்.ஜேக்கப், திரு ஆர். பாலகிருஷ்ணப்பிள்ளை, திரு பி.கே. குஞ்சாலிகுட்டி, திரு எம்.ஆர். ரகுசந்திரபால் ஆகியோர் தங்களது ஏராளமான பணிகளுக் கிடையேயும், சென்னைக்கு வந்து என்னைப் பெருமைபடுத்தியமைக்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கு கூடியிருப்போர் அனைவரும் செல்வச் செழிப்பும், வெற்றியும், மகிழ்ச்சியும் பெற வாழ்த்துகிறேன்.

இந்த விருதுடன் ரூபாய் 25 ஆயிரம் இன்று எனக்கு வழங்கப்பட்டது. இந்த மகிழ்ச்சிகர மான விழாவில் இந்த ரூபாய் 25 ஆயிரத்தை திருவனந்தபுரத்தில் உள்ள 'ஸ்ரீ சித்ரா ஏழை விடுதி' என்னும் அனாதை இல்லத்திற்கு நன் கொடையாக வழங்குகிறேன்.

மாண்புமிகு கேரள அமைச்சர் திரு ஜேக்கப் தனது உரையில் சிந்தனையைத் தூண்டும் சில எண்ணங்களை வெளியிட்டார். மாநில அரசுகள் நிறைய அதிகாரங்களைப் பெற வேண்டும் என்றும், மைய அரசு மாநில அரசு களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்க வேண் டும் என்றும் அவர் கூறியதை முழுவதும் ஏற்றுக் கொள்கிறேன். இந்த விருதை எனக்கு வழங்கிய, இதுபோன்ற நல்லெண்ண வெளிப்பாட்டின் விளைவாக தமிழ்நாட்டிற் கும் கேரளாவிற்கும் இடையே அதிக ஒத் துழைப்பு ஏற்படும். உங்கள் முதலமைச்ச ரோடும், உங்கள் மாநிலத் தலைவர்களோடும் இணைந்து, மாநில அரசுகளுக்கு, மத்திய அரசு அதிக அதிகாரங்கள் வழங்க வேண்டும் என் பதை வலியுறுத்தும் இயக்கத்தில் பணிபுரிய நான் தயாராக உள்ளேன், என்பதை திரு ஜேக்கப் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய உரையை முடிப்பதற்கு முன்னர் கேரளத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் என் வாழ்த்துக்களையும், நன்றியையும் மலையாளத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

"ஈ சந்தோஷ அவசரத்தில் எல்லா கேரளீயருக்கும் என்டெ நன்னி ஞான் பிரகட பிச்சுக் கொள்ளுன்னு – எல்லா கேரளீய ருக்கும் என்டெ மங்களா சம்ஸகள்".




## அறக்கட்டளையின் பாராட்டிதழ்

'பொன்னார ஸ்ரீதர் அறக்கட்டளை நிறுவிய ராஷ்ட்ரீய பீஷ்மாச்சாரிய விருதினை, இன்று இந்தியாவிலிருக்கும் ஒரே பெண் முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு வழங்கும் இவ்வினிய விழாவில் பாராட்டிதழைப் படிப்பதில் பெருமையடைகிறேன். சுதந்திரப் போராட்ட வீரர்களின் முன்னணித் தலைவராகவும், ஏழை எளியவர்களின் இதயங் கவர்ந்தவருமான அமரர் பொன்னார ஸ்ரீதர் அவர்களின் நினைவை நிலைநிறுத்தும் வகையில் அமைக்கப்பெற்ற இந்த ராஷ்ட்ரீய பீஷ்மாச்சாரிய விருதைப் பெறும் முதல் பெண்மணி, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களே என்னும் முக்கியத்துவமும் இந்த விழாவிற்கு உண்டு.

தமிழக மக்களால் "புரட்சித் தலைவி" என்று அன்போடு சரியாக அழைக்கப்படும் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் வாழும்போதே வரலாறான சாதனையாளர் என்னும் அதிசயப் பிரிவைச் சார்ந்தவர். அவர், இலட்சக்கணக்கான தமிழர்களுக்கு மட்டும் தலைவர் அல்லர். அவர் உயர்ந்த நிலையில் போற்றப்படும் தேசியத் தலைவரும் ஆவார். 24.2.1948-இல் சிறந்த கலாச்சாரமிக்க குடும்பத்தில் பிறந்த இவர் பள்ளிப் பருவம் முழுவதிலும் நிறைய விருதுகளைப் பெற்றுள்ளார். வாழ்க்கையெனும் பல்கலைக் கழகத்தில் பயிலும்போதே கலைத் துறையில் தன்னிகரற்ற தலைமையை நிரூபித்துக் காட்டினார். அப்போதைய தமிழக முதல்வராக இருந்த புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், பலவிதத் திறமைகளைப் பெற்றிருந்த டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் சிறப்பியல்புகளைக் கவனித்து, தன் முதிர்ந்த வழிகாட்டுதலினால், அவரை ஒரு மக்கள் தலைவராக மாற்றினார். டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 1991-இல் நடந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வெற்றி இதுவரை வேறு எவரும் சாதிக்காதது மட்டுமல்லாமல், அவரை ஒரு தலைசிறந்த மேன்மையான தலைவராகவும் காட்டியது.

இவர் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற காலந்தொட்டுப் பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். ஆகியோரது வழியிலேயே நடந்து வருகிறார். தமிழகத்தில் ஒரு புரட்சிகரமான சகாப்தத்தை உருவாக்கினார். தேசிய மற்றும் உலகளாவிய கண்ணோட்டம் கொண்ட ஒரு மாநில முதல்வர் என்பதை நிரூபித்தார்.

ஒரு தலைசிறந்த திறமையான நிர்வாகி என்ற முறையில், ஏழை எளியோரின் நலனில் அக்கறை காட்டும் தலைவியாக, நாடு முழுமைக்கும் சிறந்த உதாரணமாகத் திகழ்ந்து வருகிறார். இன்று இலட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கைக்கு இவர் வழிகாட்டிக் கொண்டிருப்பினும், அவர் கடந்து வந்த பாதை கடும் தடைகளைக் கொண்டது.

அவரது உறுதியான எண்ணங்களின் மீது அவருக்கிருந்த தைரியம், அவரது அறிவுக் கூர்மை ஆகியவை அவரை நல்ல நிலையில் நிறுத்தியது. தன்னுடைய மனதுக்குப் பிடித்த கொள்கைகளை விட்டுக் கொடுக்கும் தன்மை உடையவரல்ல இவர். மனித சமுதாயம் முழுமைக்கும் ஒரு தெளிவான சிந்தனை உடையவர். முதல்வராகப் பதவியேற்றதற்குப் பின்னர் தன் பொறுப்புகளைத் தீர்க்க தரிசனத்துடனும், உறுதியோடும் நிறைவேற்றி வந்தார். தமிழகத்தின் அனைத்துத் துறைகளின் மேம்பாட்டிலும் மகத்தான வெற்றியைக் கண்டார்.

சமூக நலம், பெண்கள் முன்னேற்றம், தொழில்மயமாக்கல், வறுமை ஒழிப்பு, விளையாட்டு, சுற்றுப்புறச் சூழல் விழிப்புணர்வு, குழந்தைகள் நலன் போன்ற துறைகளில் அவரது பங்கு தேசிய மட்டத்திலும் உலக அளவிலும் பாராட்டப் பெற்றது. சென்னையில் மிகக் குறுகிய காலத்தில் உலகத் தரம் வாய்ந்த ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம், அவர் விளையாட்டுத் துறையில் கொண்டிருந்த ஆர்வத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. இந்தத் துறையில் அவரது முயற்சிக்கு உலகளாவிய அங்கீகாரம் கிடைத்துவிட்டது. கலை, கலாச்சாரத் துறைகளில் தமிழகம் மிக உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்ற அவரது ஆர்வத்தைத் தரமணியில் உள்ள ஜெ.ஜெயலலிதா திரைப்பட நகர் எடுத்துக்காட்டுகிறது. பெண் சிசுவதையைத் தடுக்க அவர் அறிமுகப்படுத்திய தொட்டில் குழந்தைகள் திட்டம் அனைவராலும் பாராட்டப் பெற்ற ஈடு இணையற்ற திட்டமாகும். குழந்தைகளின் நலனில் அவருக்கு இருந்த ஈடுபாட்டை அவர் தொடங்கிவைத்த "டாக்டர் ஜெ.ஜெயலலிதா 15 அம்சக் குழந்தைகள் நலத் திட்டம்" கோடிட்டுக் காட்டுகிறது. யுனிசெப் போன்ற பல உலக நிறுவனங்களின் கவனத்தை இத்திட்டம் வெகுவாக ஈர்த்துள்ளது.

ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்ற டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மலையாளமும் நன்கு அறிந்தவர். மிக ஆழ்ந்த படிப்பாளியான அவர், தன் அறிவைத் தொடர்ந்து பெருக்கிக் கொண்டே செல்கின்றார். ஒவ்வொன்றையும் ஆராய்ந்து பார்க்கும் அவரது தனிச் சிறப்பு அவருக்கு வெற்றி மீது வெற்றியைப் பெற்றுத் தருகிறது. உயர் கல்விக்கான மாநிலக்குழு மற்றும் கல்விக்குழு, மாநில ஆலோசனைக்குழு உருவாவதில் இவர் மிகவும் காரணமாக இருந்தார்.

தனது விடா முயற்சியால், தமிழகத்தின் கல்வி, வேலை வாய்ப்பு நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 69 சதவிகித இட ஒதுக்கீட்டை வழங்கும் தமிழகச் சட்டத்திற்கு அரசியல் நிர்ணயச் சட்டப் பாதுகாப்பைப் பெற்றதன் மூலம், டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் இந்திய அரசியலில் ஒரு உன்னத இடத்தை அடைந்தது மட்டுமல்லாமல், "சமூகநீதி காத்த வீராங்கனை" என்று போற்றப்படுகிறார்.

டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் பல்வேறு சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில், சென்னைப் பல்கலைக்கழகமும், மதுரை காமராசர் பல்கலைக்கழகமும், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகமும், அவருக்குக் கௌரவ டாக்டர் பட்டங்களை வழங்கின.

திராவிடக் கலாச்சாரத்தையும் தமிழ் மொழியினையும் பேணிப் பாதுகாத்து மேம்படுத்துவதில் அவர் காட்டும் ஆர்வம் போற்றுதலுக்குரியது. இருப்பினும் அவரது புகழ் தமிழக எல்லைகளைக் கடந்து செல்கிறது. அவரது புத்திக் கூர்மையும், மகத்தான மனிதாபிமானமும், மன உறுதியும் இலட்சக்கணக்கான இந்தியர்களின் இதயங்களில் அவருக்கென்று ஒரு தனி இடத்தைப் பெற்றுத் தந்துள்ளது. தன்னிகரற்ற அவரது சாதனைகள் இந்த இளம் வயதில், அவரை நிர்வாகத் துறையில் ஒரு கதாநாயகியாக உயர்த்தியுள்ளது.

நிகரற்ற முற்போக்கு எண்ணங்கள், ஏராளமான தீர்க்க தரிசனம், மகத்தான அர்ப்பணிப்பு, ஏழை எளியோரின்



ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை தேவை
மகிழ்ச்சி தேவை இந்தத் தேவைகளுக்கு
அடிப்படை வளரவும் வாழவும்
தடையில்லாமல் இருப்பது தான்.

தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்கள்,
பிற்படுத்தப்பட்ட மக்கள் ஆகியோரின்
நலன்களைக் காப்பாற்றி அவர்களை
மேம்படுத்தப் பாடுபடுவோம்.

முன்னேற்றத்திற்காகத் தியாகம் செய்யும் உள்ளம், அதிசயிக்கத் தக்க அளவிலுள்ள கிரகித்துக் கொள்ளும் தன்மை ஆகியவற்றால் பிரம்மிக்கத்தக்க உன்னத நிலையை அடைந்தார். இந்தக் காரணங்களுக்காக, பொன்னார ஸ்ரீதர் அறக்கட்டளை, இவ்வாண்டுக்கான ராஷ்ட்ரீய பீஷ்மாச்சாரிய விருதினை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு வழங்க, ஒருமனதாக தீர்மானித்தது.

### விழா நிகழ்ச்சிகள்

**த**மிழக அரசியல், பொருளாதார, சமுதாய மறுமலர்ச்சியை உருவாக்கி, சிறந்த சேவை புரிந்தமைக்காக, இந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு, கேரள மாநில திருவனந்தபுரத்தில் உள்ள பொன்னார ஸ்ரீதர் அறக்கட்டளை நிறுவிய ராஷ்டிரிய பீஷ்மாச்சாரிய விருது வழங்கும் விழா 21.11.94 அன்று மாலை 6 மணிக்கு சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. இரண்டு கிலோ எடையுள்ள இவ்விருது தங்கமுலாம் பூசப்பட்டது. அத்துடன் ரூ.25,000 ரொக்கப் பரிசும் கொண்டது.

இவ்விருதினைப் பெறுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், மாலை 6 மணிக்குக் கலைவாணர் அரங்கத்திற்கு வந்தார். கேரள மாநில வழக்கப்படி, கேரளத்துப் பெண்கள் கைகளில் தீபம் ஏந்தியும், வண்ணக் குடைகளைப் பிடித்தும், மாண்புமிகு முதலமைச்சரை வரவேற்றனர். கலைவாணர் அரங்கின் வாயிலில் நான்கு யானைகள் அவரை வரவேற்றன.

பலத்த கரகோஷத்திற்கும், வாழ்த்தொலிகளுக்கும் இடையே முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மேடைக்கு வந்தார்.

தமிழ்நாடு மலையாளிகள் சங்கத் தலைவரும் அறக்கட்டளையின் ஆயுள்கால உறுப்பினருமான திரு. புருஷோத்தமன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இவ்விருது வழங்கப்படுவதற்கான காரணங்களை விளக்கும் பாராட்டிதன்,ழ, அறக்கட்டளையின் உறுப்பினர் டாக்டர் சி.வி. மோகன் போஸ் படித்தார்.

விழாவுக்குத் தலைமை தாங்கிய மாண்புமிகு கேரள கலாச்சார மற்றும் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு டி.எம். ஜேக்கப் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடம் 1994-ஆம் ஆண்டுக்கான "ராஷ்ட்ரீய பீஷ்மாச்சாரிய விருதை வழங்கினார்.

மாண்புமிகு கேரள மாநில உற்பத்தி வரித்துறை அமைச்சர் திரு எம்.ஆர். ரகு சந்திரபால் மாண்புமிகு முதலமைச்சரிடம் "ராஷ்ட்ரீய பீஷ்மாச்சாரிய" விருதுடன் கூடிய பரிசுத் தொகை ரூ.25,000-ஐ வழங்கினார். அதையடுத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

விருதுடன் வழங்கப்பட்ட ரூ.25,000-ஐ, கேரளாவிலுள்ள அநாதைக் குழந்தைகள் இல்லமான "ஸ்ரீசித்ரா ஏழைக் குழந்தைகள் இல்லத்துக்கு" நன்கொடையாக வழங்குவதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறினார்.

இவ்விழாவிற்குப் பொன்னார ஸ்ரீதர் அறக்கட்டளை செயல் தலைவர் திரு பி. மாதவன் நாயர் முன்னிலை வகித்தார். இந்த அறக்கட்டளையின் பொதுச் செயலாளர் திரு கே.சி. கோபால கிருஷ்ணன் நாயர் அறிக்கை படித்தார். அறக்கட்டளை இயக்குநர் திரு தாமோதரன் பொட்டி, பொதுச்செயலாளர் திரு கே.வி. நாயர் ஆகியோர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டிப் பேசினார்கள். பேராசிரியர் முரளிதரன் நாயர் நன்றி நவில, நாட்டுப்பண் இசைக்க, விழா இனிது நிறைவுற்றது.





படமும் செய்தியும்

ஆந்திர மாநிலத்திலிருந்து டெல்லி செல்லும் வழியில் சென்னை விமான நிலையத்தில் வந்திறங்கிய மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்களை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பூச்செண்டு அளித்து வரவேற்று அன்புடன் வழியனுப்பி வைத்தார். (22.11.94)

மறைந்த அன்னை இந்திராகாந்தி அவர்களின் நினைவு நாளையொட்டி தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர், "தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழி"யைப் படிக்க, தலைமைச் செயலக ஊழியர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். (19.11.94)







**தமிழகம் முழுவதும் மாசுத் தடுப்புப் பகுதியாக அறிவிப்பு - 36 இடங்களில் தொழிற்சாலைக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்**

# மாசுக் கட்டுப்பாடு வாரியப் புதிய கட்டடம்: மாண்புமிகு முதல்வர் திறந்துவைத்தார்

**சென்னையில்** ஏழரைக் கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியக் கட்டடத்தை, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்.

சென்னை கிண்டி அண்ணா சாலையில் ஸ்பிக் நிறுவனம் அருகே, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத் தலைமை அலுவலகக் கட்டடம் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது.

இந்தப் புதிய கட்டடம் 6 மாடிகள் கொண்டது. கட்டுமானச் செலவு 7 கோடியே 56 இலட்சம் ரூபாய்.

இந்தப் புதிய கட்டடத்தின் திறப்பு விழா 30.11.94 அன்று நடைபெற்றது.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத் தலைவர் திரு. சி. தங்கராசு, உறுப்பினர்செயலாளர் திரு ரங்கசாமி, கட்டடத் தலைவர் திரு நாராயணராவ் ஆகியோர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களை வரவேற்றனர்.

புதிய கட்டடத்தை, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் குத்து விளக்கு ஏற்றித் திறந்து வைத்தார்.

திறப்பு விழா முடிந்ததும், விழாவுக்கு வந்த பிரமுகர்கள் இருந்த பக்கம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள்

வந்தார். மாண்புமிகு முதலமைச்சரைப் பார்த்ததும் அவர்கள் கரவொலி எழுப்பி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் கையை அசைத்து அவர்களின் வரவேற்பை ஏற்றுக்கொண்டார்.

விழாவில், மாண்புமிகு சட்டப் பேரவைத்தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்களும், மாண்புமிகு அமைச்சர்கள் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி, திரு. எஸ்.டி. சோமசுந்தரம், திரு

படுதலைத் தடுப்பது, கட்டுப்படுத்துவது மற்றும் நீக்குவது பற்றி விரிவாகத் திட்டம் தீட்டுதல்.

☆ நீர், நிலம் மற்றும் காற்று மாசுபடுவது பற்றிய பிரச்சினைகள் மற்றும் அதனைத் தடுப்பது, கட்டுப்படுத்துவது மற்றும் நீக்குவது சம்பந்தமான ஆய்வு மற்றும் ஆராய்ச்சியை ஊக்குவித்தல், மேற்கொள்ளுதல் மற்றும் கலந்து கொள்ளுதல்.

லத்தில் விடப்படும் வாயுக் கழிவுகள் ஆகியவற்றிற்கு வரைமுறைகளை விதித்தல், மாற்றியமைத்தல் மற்றும் நீக்குதல்.

☆ தீங்கு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்களைச் சேமிக்க மற்றும் வெளியேற்ற இடங்களைக் கண்டறிதல் மற்றும் கண்காணித்தல்.

☆ வடிகால் கழிவுநீர், தொழிற்சாலைக் கழிவுநீர் மற்றும் வாயுக் கழிவுகளின் மாதிரி



ஆர்.எம். வீரப்பன், திரு இ. மதுசூதனன், திரு டி. ஜனார்த்தனன், திரு சத்தியமூர்த்தி, திரு எம். சின்னசாமி, திரு அ.மா. பரமசிவன், திரு டி.எம். செல்வகணபதி, திரு டி. ஜெயக்குமார் மற்றும் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு அரிபாஸ்கர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்த வாரியம் கீழ்க்கண்ட முக்கியப் பணிகளைச் செய்கிறது.

☆ நீர் மற்றும் காற்று மாசு

☆ வடிகால் கழிவுநீர் மற்றும் தொழிற்சாலைக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் செயல்திறனை ஆய்வு செய்யவும் மற்றும் வரைபடங்கள் விளக்கக் குறிப்புகளை மேம்படுத்தும் பொருட்டு மறுபரிசீலனை செய்தல்.

☆ வடிகால் கழிவுநீர் மற்றும் தொழிற்சாலைக் கழிவுநீர், தொழிற்சாலைகள், வாகனங்கள் மற்றும் பிற ஆதாரத்திலிருந்து வெளிமண்ட

களைச் சேகரித்து குறிப்பிட்ட தன்மைகளைப் பரிசோதனை செய்தல்.

தொழிற்சாலைகள் – அவைகளின் மாசுபடுத்தும் அளவைப் பொருத்து சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை ஆகிய பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. புதிய மற்றும் ஏற்கெனவே இயங்கும் தொழிற்சாலை நீர் மற்றும் காற்று மாசுத் தடுப்புச் சட்டங்களின் கீழ் வாரியத்திடம் இசைவு பெற வேண்டும். அபாயகரமான கழிவு



களை உண்டாக்கும் தொழிற் சாலைகள் போக்குவரத்து, கையாளுதல், சேமிப்பு மற்றும் வெளியேற்றுவதற்கு வாரியத் திடம் இருந்து அங்கீகாரம் பெற வேண்டும்.

### தமிழகம் முதுவதும் மாசுத் தடுப்புப் பகுதி

வாரியம் கழிவுநீர், வெளிக் காற்றின் தரம் மற்றும் வாயுக் கழிவுகளின் வரையறைகளை நிர்ணயித்துள்ளது. தமிழ்நாடு மாநிலம் முழுவதும் காற்று மாசுத் தடுப்புப் பகுதியாக அறி விக்கப்பட்டுள்ளது.

வாரியம் தனது பணிகளைப் பகிர்ந்தளித்து, மாவட்ட மற்றும் வட்டார அலுவலர்களுக்கு அதி காரங்களை ஒப்படைத்துள்ளது. வாரியத்தின் இசைவைக் கோரும் தொழில் முனைவர்கள் மாவட்ட அலுவலகங்களுக்கு விண்ணப்பம் செய்ய வேண்டும். அவை அங்கு பரிசீலனை செய்யப்பட்டு, தலைமை அலு வலகத்திற்கு அங்கீகாரத்திற்கு அனுப்பப்படுகிறது. வாரிய இசைவு காலமுறைப்படி புதுப்பிக்கப்பட வேண்டும். ஆரஞ்சு மற்றும் பச்சைப்பிரிவுத் தொழிற்சாலைகளின் இசைவை புதுப்பிக்கும் அதிகாரத்தை மண்டல அலுவலகத்திலுள்ள இணைத் தலைமைச் சுற்றுச்சூழல் பொறியாளர்கட்கு வாரியம் பகிர்ந்தளித்துள்ளது.

வாரியம், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் காற்று மாசுத் தடுப்புச் சாதனங்களை அமைக்குமாறு எல்லாவகைத் தொழிற்சாலைகளையும் இடை விடாது மிகக் கண்டிப்பாக வலியுறுத்தி வருகிறது.

### பொது சுத்திகரிப்பு நிலையங்கள்

தோல் பதனிடும் மற்றும் சாயத் தொழில் பிரிவில் உள்ள சிறு தொழிற்சாலைகளைப் பொறுத்த வரை இவ்வகைத் தொழிற் சாலைகள் தொகுதியாக இருக் கும் இடங்களில் இவைகள் உண் டாக்கும் சுத்திகரிப்பு நிலையங் களை அமைக்க மிகப் பெரிய அளவில் திட்டங்களை அமைக் கும் புது முயற்சியில் வாரியம் ஈடுபட்டுள்ளது. மேற்கூறியுள்ள இரண்டு தொழிற்பிரிவுகளுக்கு மாநிலத்தில் 36 மையங்களில் இதுபோன்ற பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

---

சமுதாயத்தில் மக்கள் வாழ்வதற்காக ஏற்றத் தாழ்வற்ற சமதர்ம சமுதாயத்தை அமைக்க வேண்டும்.

சமூக முன்னேற்றமும், பொருளாதார வளர்ச்சியும் ஒரு நாட்டின் இன்றியமையாத தேவை என்றாலும், அதன் பலன்கள் ஏழை, எளிய மக்களுக்குக் கிடைப்பது அவசியம்.



. டாக்டர் எம்.ஜி.ஆர்.

# மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் அரிய முயற்சியால் தஞ்சை அரண்மனை வளாகம் புதுப் பொலிவு பெறுகிறது !



**16-ஆம் நூற்றாண்டில்** நாயக்க மன்னர்களால் கட்டப்பட்ட தஞ்சாவூர் அரண்மனை பின்னர் மராட்டிய மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் சில மாறுதல்கள் அடைந்து தமிழகத்திலேயே சுமார் 100 ஏக்கர் நிலப்பரப்பில் இதுநாள்வரை பழங்காலக் கட்டடக் கலையை நினைவுகூரப் பாதுகாக்கப்பட்டு வருகின்ற ஒரு நினைவுச் சின்னமாகும். இதில் 1980-ஆம் ஆண்டு முதல் பல்வேறு பகுதிகள் சிதைந்து அரண்மனையின் அழகு அழிந்து விடுமோ என்று தஞ்சை மக்களும், தமிழக மக்ளும் அஞ்சிய நேரத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 1992-ஆம் ஆண்டு கட்டடக் கலை வல்லுநர்களைக் கொண்ட ஓர் உயர்மட்டக்குழு அமைத்து தஞ்சாவூர் அரண்மனையில் ஏற்பட்டுள்ள பழுதினை நீக்கவும், அதன் சிறப்பைப் பாதுகாக்கவும், என்ன செய்ய வேண்டுமென்று, உயர்மட்டக்குழுவின் அறிக்கையைப் பெற்று, அரண்மனையின் பல்வேறு பகுதிகளையும் எவ்வளவு செலவு ஆனாலும் புதுப்பிக்கப்பட வேண்டும் என மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டதன் பேரில், தற்பொழுது ரூபாய் ஒரு கோடியே 50 இலட்சம் மதிப்பில் அரண்மனை புதுப்பிக்கப்பட்டு வருகின்றது.

தஞ்சாவூர் அரண்மனை புதுப்பிக்கும் பணியின் முதல் கட்டமாக ஆயுதக் கோபுரம், மணி மண்டபம், சார்ஜா மாடி மற்றும் மராட்டியர் தர்பார்ஹால் ஆகியவை எடுத்துக்கொள்ளப்பட்டு அவற்றைப் புதுப்பிக்கும் பணியில் இந்திய அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையும், லக்னோவில் உள்ள இன்டாக் கலை நுட்ப நிறுவனமும் மிகச் சிறப்பாகப் பணியில் ஈடுபட்டுள்ளன.

அரண்மனை வளாகத்தில் மிகச் சிறப்பான பகுதியாக விளங்கும் நாயக்கர் கால இந்திரா மந்திரம் எனும் அழகுக் கோபுரம் (ஆயுதக் கோபுரம்) புதுப்பிக்கும் பணி ரூபாய் 15 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு, கோபுரத்தின் வெளிப்பகுதி முழுவதும் இரசாயன முறைப்படிச் சுத்தம் செய்யப்பட்டு, பழங்கால முறைப்படி அம்மியில் அறைத்த கலவையை, மிக நுண்ணிய அளவில் தகுந்த வண்ணப்படி வெளிப் பகுதி முழுவதும் பூசப்பட்டுள்ளது. இதனால் எதிர்காலத்தில் எவ்வித வெடிப்புகளும் ஏற்படுவது தடுக்கப்படுவதுடன் அழகும் கூடியுள்ளது.

இதேபோல் இக்கோபுரத்தின் உட்பகுதியிலும், வெளியிலும் இருந்த சிதைந்த சுதை உருவங்கள் வல்லுநர்களைக் கொண்டு சீரமைக்கப்பட்டுள்ளது. மற்றும் ஆயுதக் கோபுரத்தின் உட்பகுதியில் இருந்த மர உத்திரங்கள் புதிதாக மாற்றப்பட்டுள்ளன. கோபுரத்தின் மேல் பகுதி

யில் அமைக்கப்பட்டுள்ள கலசம் இரசாயன முறைப்படிச் சுத்தம் செய்யப்பட்டுள்ளது. கோபுரத்தின் உட்பகுதியில் கவிழ்ந்த தாமரைப் பூ போன்ற வடிவமும் சிதைந்திருந்தது சீர மைக்கப்பட்டு அழகுப்படுத்தப்பட்டுள்ளது. கோபுரத்தின் பல்வேறு அடுக்குகளில் இருந்த கதவு ஜன்னல்களும், மரவேலைப்பாடுகளும், பழங்கால அலங்காரங்களும் அதே முறையில் அமைக்கப்பட்டு, ஆயுதக் கோபுரத்தின் அழகிய தோற்றம் அனைவரையும் கவரும் வகையில் அமைக்கப்பட்டு வருகிறது.

ஏழு மாடிகளைக் கொண்ட "தொள்ளக் காது" மண்டபம் என்று அழைக்கப்பட்டு வந்த 'மணிமண்டபம்' ரூபாய் 10 இலட்சம் மதிப்பில் புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணி மேற்கொள்ளும்போது இம்மண்ட பத்தின் கீழ்த்தளம் 15 அடி ஆழத்திற்கு மண் ணால் மூடப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டு, கீழ்த்தளத்திலிருந்து மண் நீக்கப்பட்டு அதன் தூண்கள் பலப்படுத்தப்பட்டுள்ளன. அந்த மண்ணை நீக்கும்பொழுது பழங்காலப் பல்வேறு பீங்கான் கலைப்பொருட்கள் கிடைத்துள்ளன. மற்றும் இந்த மண்டபத்தின் மேல் பகுதியில் முளைத்திருந்த செடி கொடிகள் அகற்றப்பட்டு, சிதைந்த சுவர்க்காறைகள் புதுப்பிக்கப் பட்டுள்ளன.

அரண்மனை வளாகத்தில் மற்றுமோர் சிறப்புடைய சார்ஜா மாடி எனப்படும் ஐந்து மாடிக் கட்டடமும் ரூபாய் 44 இலட்சம் மதிப் பீட்டில் புதுப்பிக்கத் திட்டமிட்டு முதற்கட்டப் பணியாக அவற்றின் குறுக்காக இருந்த தேவையற்ற தடுப்புச் சுவர்கள் அகற்றப் பட்டுள்ளன. சுவர்க் காறைகள் முழுவதும் அகற்றப்பட்டு அவற்றைப் புதுப்பிக்கும் பணியும் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

கலையழகுடன் கூடிய மராட்டா தர்பார் மண்டபமும் சீரமைக்க ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் திட்டமிட்டு, அவற்றில் உள்ள அழகிய சுதை உருவங்கள், தொன்மையான ஓவியங்கள் முதலியவை லக்னோவில் உள்ள இன்டாக் நிறுவனம் மூலம் இரசாயன முறைப் படிப் புதுப்பிக்கப்படுகின்றன.

இந்த மண்டபத்தில் உள்ள பழுதடைந்த தூண்கள் பலப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் மேல் தளத்தில் இருந்த செடி, கொடிகள் அகற்றப்பட்டுள்ளன. மேற்கண்ட அனைத்துப் பணிகளுக்கும் ரூபாய் 85 இலட்சம் மதிப்பில் தேக்கு மரங்கள் பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மற்றும், வருங்காலத்தில் அரண் மனை வளாகம் தூய்மை காக்கப்பட நவீன முறையில் வடிகால் வசதி அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தப் பணிகள் யாவும் எட்டாவது உலகத் தமிழ் மாநாடு தஞ்சையில் நடைபெற உள்ளதை யொட்டி, கூடுதலான பணியாளர்களையும், தொழில் நுட்ப வல்லுநர்களையும், வெளி மாவட்டங்களிலிருந்து வரவழைத்து இரவு பகலாக வேலைகள் நடைபெற்று வருகின்றன. தஞ்சைக்கு உலக அளவில் பெருமை சேர்க்கும் பெரிய கோவிலைப்போல், தஞ்சாவூர் அரண்மனையும் புகழ்பெற்று இந்தியாவுக்குப் பெருமை சேர்க்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மேற்கொண்டுள்ள மாபெரும் பணியாகப் பழம்பெருமை வாய்ந்த தஞ்சை அரண்மனை பொலிவு பெறுகிறது.



**கவிதை**

கவிதை எப்போது ஒரு நாட்டில் பிறக்கும்? மொழி வளர்ந்து - இலக்கியம் வளர்ந்து - அதை மக்கள் உணருகின்ற நேரத்தில் தான் தோன்றும்.

எழுத்து சுவைமிக்கதாக மட்டுமிருந்தால் போதாது. சுவையோடு கூடிய பயனும் உள்ளதாக இருக்க வேண்டும். அப்போது தான் முழு அளவு பாராட்டத்தக்க இலக்கியமாக - கவிதையாக அது திகழும்.

-பேரறிஞர் அண்ணா.



# பாரதி சில நினைவுகள்

## "சாதி மதங்களைப் பாரோம்"!

பழைய பழக்க வழக்கங்களில் பலவற்றை வேரோடு பெயர்த்து எறிந்துவிட வேண்டும் என்று பாரதி துடிப்பார். திருமதி செல்லம்மா இந்த விஷயத்தில் அடிக்கடி அபிப்பிராயப் பேதப்படுவார். வீட்டின் சமையலறையில் செல்லம்மா 'மடி'யாக ஆசாரத்துடன் சமையல் செய்து கொண்டிருப்பார். பாரதியார் வெளியிலிருந்து வந்து கை, கால் கழுவி நேராக உள்ளே போய்ச் சமையல் பாத்திரங்களில் வைத்திருப்பதைத் தொட்டு விடுவார். 'பத்து' தொட வேண்டாம்! என்று செல்லம்மா ஆட்சேபிப்பார். பாரதி அதைப் பொருட்படுத்தவே மாட்டார். இருவருக்கும் வாக்குவாதம் பலக்கும். முடிவில் இவரது பேச்சே உயர்ந்து நிற்கும். செல்லம்மா பேசாமல் இருந்துவிடுவார்.

யார் சாப்பிட அழைத்தாலும் சரி, பாரதியார் மறு மொழியில்லாமல் ஒப்பி விடுவார். சாதி, மதம் ஒன்றையும் பார்க்க மாட்டார். வாயால் பாடுவதைப் போலவே, நடத்தையிலும் செய்து காட்டுவார். மனத்தில் நினைத்தால் போதும், செயலிலும் காட்டி விடுவார். எவ்வளவு கஷ்டமானாலும் சளைக்க மாட்டார். யார் என்ன சொன்னாலும் பொருட்படுத்த மாட்டார்.

- 'பாரதி நினைவுகள்' என்னும் நூலில் திருமதி. ய்துகிரி அம்மாள்.

## காவடிச் சிந்து

அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்துகள் புகழ் பெற்றவை. ஒரு சமயம் எட்டயபுரம் அரசரும் மற்றும் சில பிரமுகர்களும் அண்ணாமலை ரெட்டியாரின் சிந்துகளைப் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தனர். இதைக் கண்ட இளம் பாரதி லேசாக நகைத்தார். 'நகைத்துப் பயனில்லை; உங்களால் முடியு மானால் இயற்றுங்கள் பார்க்கலாம்' என்றார் ஒரு புலவர். 'இன்று மாலைக்குள் ஒரு சிந்துடன் வருகிறேன்' என்று கூறி, அப்படியே மாலையில் கீழ்வரும் சிந்துடன் அரண்மனைக்கு வந்தார் பாரதி. உடனே புலவர்களை அழைத்து, அவர் முன்னிலையில் இப்பாடலை அரங்கேற்றம் செய்வித்தார் அரசர். புலவர் யாவரும் போற்றி னர். அந்தச் சிந்தின் ஒரு பகுதி மட்டும் கிடைத் துள்ளது.

இப்பாடலைப் பாரதியாரின் தம்பி ஸ்ரீ சி.விசுவநாதன் 1920-இல் ஆங்கிலத்தில் வெளியிட்ட பாரதி சரித்திரத்திலும், தி.ஜ.ர. அவர்கள் 1940-இல் வெளியிட்ட 'புதுமைக் கவி பாரதியார்' என்ற நூலிலும் காண்கிறோம்.

'பச்சைத் திருமயில் வீரன்
அலங் காரன், கௌ மாரன் ஒளிர்
பன்னிரு திண்புயப் பாரன், அடி
பணி சுப்பிர மணியர்க்கருள்
அணி மிக்குயர் தமிழைத்தரு
பக்தர்க் கெளியசிங் காரன் எழில்
பண்ணு மருணாசலத் தூரன்.'

- ஆதாரம்: திரு ரா.அ.பத்மநாபன் தொகுத்த 'பாரதி புதையல்' என்னும் நூலிலிருந்து.

சிறு சேமிப்பு - உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

## செழிப்பான வாழ்விற்கு
## இன்றே முதலீடு செய்வீர்

# கிசான் விகாஸ் பத்திரம்

**உங்கள் முதலீடு 5½ ஆண்டுகளில் இருமடங்கு வளர்கிறது.**

### சிறப்பு அம்சங்கள்

- ஐந்தரை ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகிறது.
- 18.18% சாதாரண வட்டி.
- பத்திரங்கள் ரூ.100/-, ரூ.500/-, ரூ.1,000/-, ரூ.5,000/-, ரூ.10,000/- மதிப்புகளில் கிடைக்கின்றன.
- அவசரத் தேவைக்கு 2½ ஆண்டுகளில் வட்டியுடன் பணம் திரும்பப்பெற வசதி.


**ரூ.1000/- முதலீட்டிற்கு கிடைக்கும் தொகை**

| ஆண்டுகள் | தொகை |
|---|---|
| 2½ ஆண்டுகளில் | ரூ.1,310/- |
| 3 ஆண்டுகளில் | ரூ.1,420/- |
| 3½ ஆண்டுகளில் | ரூ.1,500/- |
| 4 ஆண்டுகளில் | ரூ.1,620/- |
| 4½ ஆண்டுகளில் | ரூ.1,730/- |
| 5 ஆண்டுகளில் | ரூ.1,860/- |
| 5½ ஆண்டுகளில் | ரூ.2000/- |

1.4.1994 முதல் தமிழ்நாட்டில் செய்யப்படும் முதலீட்டிற்கு

**2%**

சிறப்பு ஊக்கத்தொகை.





தமிழ்நாட்டில் செய்யப்படும் ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கு ஒரு இலவச பரிசுக் கூப்பன் பெற்று, கவர்ச்சிகரமான மாருதி ஆம்னிவேன் அல்லது டிராக்டர் (இயந்திரக் கலப்பையுடன்) உட்பட 619 பரிசுகளை வெல்ல வாய்ப்பு.

மேலும் விவரங்களுக்கு

**ஆணையர்,**
சென்னை மாநகராட்சி (சி.சே.பிரிவு), சென்னை-3,
தொலைபேசி: 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம்,
92, அண்ணா சாலை, சென்னை-2.,
தொலைபேசி: 849962

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

**இயக்குநர், சிறு சேமிப்புத் துறை**
*சயர் மேன்ஷன், 621, அண்ணா சாலை,*
*சென்னை - 600 006.*
*தொலைபேசி: 8251784/8251685.*

DIPR/519/DIS/94

*சிறு குடும்பம் செல்வக் குடும்பம்*

# அறநெறி முதற்று!

–நீதிபதி மு.மு. இஸ்மாயீல்

**1995-ஆம் ஆண்டு, ஜனவரித் திங்களில், தஞ்சைத் தரணியில் எட்டாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெறுவதையொட்டி, புலவர் பெரு மக்கள் குறித்த கட்டுரை இதழ்தோறும் இடம் பெறுகின்றது. அந்த வகையில், அன்னைத் தமிழுக்கு அணியாரம் சூட்டும் வகையில் 'அறநெறி முதற்று' என்னும் கட்டுரை இங்கே இடம் பெறுகின்றது.**

உலகில் உள்ள நாடுகள் ஆளப் பெறும் முறைகளால் பல்வேறு பட்டனவாக இருக்கின்றன. சில நாடுகளில் ஜனநாயக முறை நிலவுகின்றது; வேறு சிலவற்றில் முடி மன்னராட்சி நடைபெறுகின்றது; இன்னும் சில நாடுகளில் சர்வாதிகார ஆட்சி முறை கோலோச்சுகின்றது.

இத்தகைய வேறுபட்ட ஆட்சி முறை காரணமாக நாட்டு மக்களுக்கும், ஆட்சி பீடத்தில் இருப்பவர்கட்கும் இடையே உள்ள உறவு முறைகள் வேறுபட்டுக் காணப்படுகிறது; இவ்வாறு பரவலான மூன்று ஆட்சி முறைகளைக் குறிப்பிட்ட போதிலும் ஒரே ஆட்சி முறை நடைபெறும் பல் நாடுகட்கும் இடையே கூட வேறுபாடுகள் இருப்பதனைக் காண்கிறோம்.

இவை அனைத்துக்கும் காரணம் அந்தந்த நாட்டின் சரித்திரமே கால ஓட்டத்தில் சரித்திர வரலாற்றில் என்னென்ன மாறுதல்கள் அவ்வப் பொழுது தோன்றின என்பதனை உலக அறிவு விசாலமாகப் பரந்திருக்கும் இன்றைய நிலையில் நாம் புரிந்து கொள்கிறோம். எனினும் ஒவ்வொரு நாட்டிலும் இன்று அமைந்திருக்கும் ஆட்சி முறையின் சரித்திரம் வெவ்வேறானதாகத்தான் அமைந்திருக்கின்றது.

இன்றைய விஞ்ஞான வளர்ச்சியால், உலகில் உள்ள பல நாடுகளுக்கும், இடையே உள்ள இடைவெளி குறுகி விட்டது. உலகின் ஒரு பகுதியில் இருந்து வேறொரு பகுதியை விரைவிலேயே சென்று அடைந்துவிட முடியும், என்னும் செய்தி ஒருபுறம் இருக்க உலகின் ஒரு பகுதியில் நடக்கும் நிகழ்ச்சியை, அதே சமயத்தில் உலகின் எல்லாப் பகுதிகளிலும் இருப்பவர்களும் பார்க்க முடியும் என்றும் அறிகிறோம். இவ்வளவிற்கு விஞ்ஞானம் வளர்ந்திருக்கின்ற நிலையில் ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்னால் ஒவ்வொரு நாட்டிலும் அரசாட்சி முறை எப்படி இருந்தது? அது கால ஓட்டத்தில் எத்தகைய மாறுதல்களை எல்லாம் அடைந்து இன்றைய நிலையை எய்தி உள்ளது என்பதனை எண்ணிப் பார்ப்பது கூட மிக இலகுவாக இருக்க முடியாது. எனினும் ஒவ்வொரு நாட்டின் சரித்திரத்திலும், பொதுவாக உலக சரித்திரத்தில் பண்டைக் காலத்திலிருந்து இன்றுவரை படிப்படியாகவே பலமுள்ள ஒருவன், ஒன்று சேராமல் இருந்த ஒவ்வொருவரையும் தனித்தனியாக ஆட்படுத்தி, இறுதியாக அவர்கள் அனைவர்க்கும் தானே தலைவன் அல்லது அரசன் என்று ஆனதைக் காண முடியும்.

மிகச் சுருக்கமாகப் பார்க்கப் போனால் ஒவ்வொரு நிலப்பகுதியிலும் சேர்ந்து வாழ்கின்ற பலர் ஒவ்வொருவரும் தம்தம் நலனிலேயே கருத்துச் செலுத்திக் கொண்டிருந்த காலத்தில், ஒருவருடைய நலனுக்கு மற்றவர்கள் முரணாக அமைய, அவ்விருவரும் தங்களுக்குள் அமைந்த இம் முரண்பாட்டைத் தீர்த்துக் கொள்வதற்கு ஒரு வழியைத் தேடிக்கொள்ள நேரிட்டது. எல்லாற்றுக்கும் முதன்மையாக அமைந்திருப்பது ஒவ்வொருவரும் தம் நலனைக் காத்துக் கொண்டு வாழவேண்டும் என்பதே ஆகும்.

இவ்வாறு இயற்கையாகவே அமைந்த முதன்மைத் தேவையின் காரணமாக முரண்பாடு உடைய இருவர்க்கு இடையே, பலப் பரீட்சை தோன்றும் என்பதும் இயல்பானதே. இருவரில் ஒருவன் மற்றவனை விட பலசாலியாக இருப்பானேயானால், அவன் அம் மற்றவனை ஒழித்துவிட, அவன் மட்டில் தனித்து நிலைத்து

நிற்கும் வாய்ப்பு உண்டாகி விடுகிறது.

இருவர் மட்டுமே இருக்கிற சூழ்நிலையில் இப்படி நிகழுமேயானால் பலபேர் இருக்கும் சூழ்நிலையில் எப்படி மாறுபடும் என்பதனை உணர்ந்து கொள்வது இலகுவே ஆகும்.

அவர்கள் அனைவர்க்கும் ஏதோ ஒன்றுதான் முக்கியம் என்று படுமானால் அவர்கள் அனைவரும் முரண்படுதல் இன்றி ஒன்றுபட்டு வாழ இடம் உண்டு. மாறாக எது முக்கியம் என்பதில் அவர்களிடையே கருத்து வேற்றுமை ஏற்படுமானால் அவர்களில் ஒத்த கருத்துடையவர்கள் ஒரு குழுவாக, பிறர் பிறிதொரு குழுவாகப் பிரிய நேரிடும்; அதுபோலவே பல குழுக்களாலான பிரிவுகள் தோன்றவும் கூடும்.

இப்பிரிவினர்க்கிடையில் மோதல் உண்டாக, எப்பொழுதுமே இறுதியாக, வெற்றிப் பெருமிதத்தில் தலை நிமிர்ந்து நிற்பது ஒரு பிரிவு ஆகத்தான் இருக்கும் என்று சொல்வதற்கும் இல்லை.

எனவே, பிரிவினர்களுடைய பலத்திற்கேற்ப இவர்களே கூட்டணிகளாகச் சேர்ந்து இரண்டு அல்லது மூன்று அணிகளாகித் தம்மிடையே உள்ள முரண்களைத் தீர்த்துக் கொள்ள முடியும். இதன் முடிவு ஒரு குழுவோ அல்லது அணியோ பலம் பெற்று மற்றதனை மற்றவற்றை அடக்கி ஆளக் கூடிய நிலைமை உண்டாகக் கூடும்.

இதன்றியும், இத்தகைய சூழ்நிலையில், ஒரு தனி மனிதன் அசாதாரணமான உடல்வன்மையும் அறிவுக் கூர்மையும் பெற்றவனாக இருக்க முடியும். அத்தகையவன் தமக்குள் முரண்பட்டுக் கொண்டிருக்கும் பிரிவினரில் ஒருவரை, மேற்பட்டவரைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு மாறுபட்டவரை அடக்க முயல, இவனுடைய கை ஓங்கவும் கூடும்.

அவனே அக் கூட்டத்தார் அனைவர்க்கும் தலைவனாகி அவர்கள்

☆ குறள் ஓர் அறிவுக் களஞ்சியம். பகுத்தறிவு மணிகளால் கோக்கப்பட்ட நூல்.



அனைவரையும் ஆள்பவனாக ஆகிவிடலாம். அவனுடைய ஆட்சி நீதியின் அடிப்படையில் நடப்பதா அன்றா என்பது எந்த அளவிற்கு அவன் தன் கீழ் வாழும் மக்களின் நன்மை தீமைகளைத் தன்னுடையதாகவே கருதி அவர்களோடு, நெருங்கிப் பழகி அவர்களது நன்மை தீமைகளில் முழுப்பங்கு எடுத்துக் கொள்வதைப் பொறுத்தது. அத்தகையவன்தான் அவர்களுக்குத் தலைவன் ஆக முடியும்.

பண்டைக்கால பழக்கப்படி அவன் அக் கூட்டத்தின் அரசனாகவோ, மன்னனாகவோ ஆகிறான்.

பூவுலகின் நெடும் பரப்பின் காரணமாகவும், ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்வதால் உண்டான இடர்ப்பாட்டின் காரணமாகவும் இத்தகைய மன்னராட்சிகள் ஆங்காங்கு தோன்றலாயின.

எந்த அரசு வன்மையில் உயர்ந்து நிற்கிறதோ, அது அருகில் உள்ள நலிந்த அரசைத் தன் ஆட்சியின் கீழ்க் கொண்டுவர முயலும். இது முடியக் கூடியதே. சாதாரண மனித இயல்பும் இதுவே.

இவ்வாறாக வீரத்திலும், மக்களுடைய அன்பைப் பெறுவதிலும் வெற்றி கண்ட ஒருவன் தன்னை விட நலிந்த அண்டை அரசினைத் தன்னுடையதாக்கிக் கொண்டு இரண்டினுக்கும் தானே அரசன் ஆதலும் உண்டு. அன்றி அம் மெலிந்த அரசினைத் தன் வயப்படுத்தி அதன் அரசனைத் தன் கீழ் அடங்கி வாழும் சிற்றரசனாக விடுத்து, அவனிடமிருந்து கப்பம் பெறும் சக்கரவர்த்தி ஆவதும் இயல்வதே.

இவ்வாறாக, ஒரு ஆட்சி, அரசநெறி என்பது எப்படி உண்டாயிற்று என்பதனைக் கடந்தகால நிகழ்ச்சிகளை, சரித்திர நூல்கள் படிப்பதன் மூலமாக, யூகத்தின் மூலமாக அறிந்து கொள்ள முடியும்.

இன்றோ நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. முடியாட்சி என்பது வரவேற்கத் தக்கதாகப் பெரும்பாலான உலக மக்களால் கருதப் பெறுவதில்லை.

மாறாக, தங்களை ஆள்பவர்கள் தங்கள் அங்கீகாரத்தைப் பெற்றவராக இருக்க வேண்டும் என்பதில் மிக்க ஆர்வம் கொண்டவர்களாக உள்ளனர்.

எனவேதான் முடியாட்சி, மக்களாட்சி என்ற பிரிவினையில், மக்களாட்சி நிலவும் நாடுகள் தாம் உலகில் பேரெண்ணிக்கையில் இருக்கின்றன.

மக்களாட்சி என்ற கருத்து ஆணிவேராக இருக்க அத்தகைய ஆட்சி எப்படிச் செயல்பட வேண்டும் என்பதும், அந்த ஆட்சி நடைபெறுவதற்கு எவ்வெவ் அங்கங்கள் அமைய வேண்டும் என்பதும் அவ்வந் நாட்டு மக்களின் விருப்பத்தின் அடிப்படையில் அமைவனவே ஆகும்.

இவை பற்றிய விரிவான செய்திகள் நாம் யாவரும் இன்று நன்கு அறிந்தனவே. காரணம் என்னவெனில் விஞ்ஞான வளர்ச்சி காரணமாக உலகம் மிகவும் சுருங்கிப்போக, உலகம் முழுவதும் நடைபெறும் நிகழ்ச்சிகளை நாம் உடனுக்குடன் தெரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்புகள் மிகுதியும் இருப்பதே.

எனவே அவற்றை நாம் விட்டு, பண்டைத் தமிழகத்தில் நம்முடைய முடி மன்னர்கள், தம் ஆட்சியை எப்படி நடத்தினர். அவர்களால் பாராட்டப்பெற்ற, தன்னலமற்ற, உலகின் நன்மைகளையே தனி

*தமிழ் நலன், தமிழின் பண்பாடு, தமிழ்ச் சமுதாயம், தமிழ் கலாச்சாரம் வளர வேண்டும் என்பது எங்கள் நோக்கம்.*

. டாக்டர் எம்.ஜி.ஆர்.

நோக்கமாகக் கொண்ட தமிழ்ப் பெருங் கவிஞர்கள், தம்முடைய படைப்புகளின் மூலம் தமிழ் மன்னர்களின் ஆட்சியின் இலக் கணம் யாது என்று அறிவுறுத்தி னார்கள் என்றும் அறிய வேண்டும்.

அத்தகைய புலவர் பெருமக்களை அரசர் பெருமக்கள் எவ்வாறு மதித்தனர். எவ்வாறு அவர் களுடைய அறிவுரைகளுக்குச் செவி சாய்த்தனர் என்பனவற்றை எல்லாம் காண்பதுதான் இக்கட்டு ரைக்குப் பொருத்தமான கருத்தாக அமைகிறது.

அரசர் உறுதிச் சுற்றம் என்ற பெயரில் ஒரு குழு இருந்தது. இக்குழுவினர் பெரும்பாலும் அர சனுடைய சொந்தப் பணிகளுக்கு உதவுபவர்களேயாம்.

இக்குழு நட்பாளர், அந்தணாளர், மடைத்தொழிலாளர், மருத்துவர், நிமித்திகர் என ஐவகையினரைக் கொண்டது.

உறுதிச் சுற்றம் என்ற தொடர்ச் சிறப்பு நோக்கத் தக்கது. இவ் வனைவரும் மன்னனை நெருங்கி இருப்பவர்கள். உண்மையில் அரச னுடைய அந்தரங்கங்களை முழுமை யுமாய் அறிந்தவராகவே இருப்பர்.

மடைத் தொழிலாளர் அரசனுக்கு உணவு தயாரித்துப் பரிமாறு பவர்கள். அரசனுடைய முழு நம் பிக்கைக்குப் பாத்திரம் ஆனவர் களாக அவர்கள் இருந்தாலன்றி, அத்தகையோர் அரசனுடைய இறு திக்கும் காரணமாதல் கூடும்.

மருத்துவர் இவர் நிலையும் அத்தகையதே. அரசனுடைய உடற் கூறு நன்கு அறிந்தவர். வந்த நோய் இன்னது என நாடி, அது வந்த விதம் நாடி, அது தணிக்கும் வாய்ப்புகளை நாடி நன்கு பரிகாரம் செய்வார். அரசன் உறு நோய் இன்னதென்றும் பலரறிய வெளிப் படுத்தாமை வேண்டும். மக்கள அறிய நேரின் தகாத ஆசைக்கும், முறையில்லா நோக்கங்களுக்கும், பெரும்பொருள் பெறும் அவாவிற் கும் இடம் ஏற்பட்டுவிடும்.

அந்தணாளர் • ஜோதிடம் நன்கு கற்றவர் நாள்கோள் நிலை அறிந்து நல்லன கெட்டன நிகழும் என முன் கூட்டியே கூறத்தக்க கடப்பாட்டி னர், நிமித்திகர் அன்றாடம் நிகழும் நிகழ்ச்சிகள், சகுனங்கள் பலன் அறிந்து கூறுபவர்.

அரசியலவையில் அரசர்க்கு உறு துணையாய், அமைபவர் ஐம்பெருங் குழுவினர் (மணிமேகலை **(1-17)** ஆட்சி, நன்கு நடைபெறப் பெரிதும் துணை நிற்பவர் இக்குழுவில் மந்திரியர், புரோகிதர், சேனாபதியர், தூதுவர், ஒற்றர் சாரணர் ஆகியோர் இடம் பெறுவர்.

உறுதிச் சுற்றத்தில் நிமித்திகன் இடம் பெறுவதையும், ஐம்பெருங் குழுவில் புரோகிதர் இடம் பெறுவதனையும் சற்று கூர்ந்து கவனிக்க வேண்டும்.

இவை அன்றியும் அரசர் பக்கம் என்றொரு தொடர் காணப் பெறுகிறது.

'ஓதல், வேட்டல், ஈதல், காத்தல்
தண்டம் செய்தல்'
(தொல். பொருள் 75)

இங்கும் கூட ஒவ்வொரு சொல் லும் கருத்துச் செறிவுடன் இருப் பதைக் காணலாம். ஓதல் என்ற சொல் பெரும்பாலும் கல்வி பயிலு கையையே குறிக்கும். இளஞ் சிறுவ னாக இருக்கும்போது குருகுலத்தில் கற்பதனை பொழுதுபோக்குக்காகப் படிப்பதனை, பின்னர் ஆட்சிப் பொறுப்பினை ஏற்க இருப்பதனால் ஆட்சி முறை, நீதி வழங்கல் முத லானவற்றில் பயிற்சி பெற அவ்வத் துறை நூல்களைக் கற்பதனையும் குறிக்கும். பிறநாடுகள் குறித்த செய்தி அறிவும் இதனுள் அடங் குவதே.

வேட்டல் - வேள்வி செய்தல்.

முற்காலத்து அரசர்கள் ராஜ சூயம், அசுவமேதம் முதலிய வேள் விகள் நடத்தினர் என நூல்கள் வழி அறிகிறோம்.

. காத்தல் என்ற சொல், நாட்டு மக்களையும் நாட்டையும் காக்கும் தொழிலில் கண்ணாக இருப்ப தனைக் குறிக்கும். தண்டம் செய்தல் என்ற சொல்லோ, நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் கேடு சூழ் வாரைச் சிறையிட்டு, அவர் செய்த தீமை அவற்றின் விளைவு இவைகட் கேற்ப விதிக்கும் தண்டனையைக் குறிக்கும்.

அரசர்களுக்கு அறுகுணங்கள் இருக்க வேண்டும் என்று கூறப் பெற்றுள்ளது. இரகு வம்ச நூற்படி அவை-

'சந்தி, விக்ரகம், யானம், ஆசனம்
துவைதம், ஆசரயம் என்பனவாம்'

(சர்க்கம் **8**, ஸ்லோகம் **21**)

தமிழ் நூல்களில் நட்பு, பகை, செலவு, இருக்கை, கூடினாரைப் பிரித்தல், பிரிந்தாரைக் கூட்டல் என்பன அரசர்க்குரியன என்று காணப் பெறுகின்றது.

ஓதல், வேட்டல், ஈதல், பல்லுயி ரோம்பல், படைக்கலம் பயிறல், பகைத் திறம் தேறுதல் என்னும் ஆறும் அரசர்க்குரியன என்று திருக்குறள் **384**-ன் பரிமேலழகர் உரை கூறும்.

முனை முகத்து, போர் வீரர் களுக்குத் தலைமை தாங்கி, முன் நின்று நடத்திச் செல்லும் பொறுப்பு தானைத் தலைவர்க்கு உள்ள தேனும், அரசனும் அப்பொறுப்பை ஏற்பான் என்று பகிற்றுப் பத்து கூறும். அதனாலேயே அவன் சான் றோர் மெய்ம்மறை எனப்படுவான் என்பர்.

'ஆக அரசுப் பொறுப்பு ஏற்பான்

யானையும் இரதமும், இவுளியும்,
முதலா

ஏனைய பிறவும், அவ்
இயல்பினில் அடையுற்று

ஊன் உறு படை சிலையொடு
பயிலா...'

நிற்க வேண்டும்எனக்கம்பன் (304) கூறுவான்.

முன் கூறப்பெற்ற ஐம்பெருங்குழு வினரேயன்றி எண்பேராயத்தர்என பாரும் அரசன் ஆட்சியின் அங்க மாக உடன் இருந்தனர் என்று அறிகிறோம்.

அவ்வெண்மர்-

கரணத்தியலவர் - அரசாங்கத்தின் பல்வேறு துறைகள். அவற்றின் வருவாய், செலவீடு இவற்றைக் கண் காணிக்கும் பொறுப்பினர்.

கருமகாரர் - கரும விதிகள் அர சாங்கத்தின் பல்வேறு துறைகள், அவற்றின் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்.

கனகச் சுற்றம் - அரசாங்கத்தின் மூல பண்டாரம் Treasury- முன் குறிப்பிட்ட 'கரணத்தியலவர் யாவர்க்கும் தலைமைப் பொறுப் பினர்.

கடை காப்பாளர் - அரண்மனை நாடு இவற்றின் காவல் பொறுப்பில் உள்ளவர் - Police watch and ward.

படைத்தலைவர், காலாட் படை, தேர்ப்படை இவற்றின் பொறுப் பாளர் யானை வீரர்.

இவுளி வீரர் - குதிரைப் படை

நகர மாந்தர் - குடி மக்கள் சார்பாக, அரசரால் தேர்ந்தெடுக் கப்பட்ட ஒரு சிலர் வயது, அனு பவம், கல்வி அறிவு சான்றவர்

என்போர் ஆவார்.

இவை அனைத்தையும் கூர்ந்து நோக்கும்பொழுது நம் முன் னோர்கள் ஒரு நாட்டின் ஆட்சிக்கு அவசியமானவை எவை என்று நுண்ணிதின் ஆய்ந்து அதற்கு ஏற்ப, தமக்குத் துணையாக வேண்டற் பாலனர், பல்வேறு நிலைகளில் பணிபுரியும் அலுவலர், கீழ்நிலைப் பணியாளர் ஆகிய அனைவரது

உண்மையான ஒழுக்கம், நாணயம் வேண்டுமானால் தேவை குறைய வேண்டும். அவசியம் குறைய வேண்டும். தேவையும் அவசியமும் அதிகமாக அதிகமாக நாணயக்கேடும் ஒழுக்கக்கேடும் வளர்ந்து கொண்டுதான் போகும்.

-தந்தை பெரியார்

பொறுப்பையும் வரையறுத்தனர் என்று அறிகிறோம்.

முடியாட்சி என்ற ஒன்று அக்காலத்தில் இருந்தது என்பது தவிர நாட்டின் ஆட்சிக்கு வேண் டிய பல்வேறு முறைகள், அம் முறைகளில், துறைகளில் பொறுப் பேற்று அதற்கேற்பத் தங்கள் கடமை களை நடத்திச் செல்பவர்கள் இன் றைய நடைமுறையில் இருப்பவர் களிலிருந்து பெருத்த அளவிற்கு வேறுபட்டு இருந்தனர் என்று சொல்வதற்கு இல்லை.

இவ்வாறெல்லாம் மிக நுணுக்கமா கவும் மனித இயற்கைக்கு ஏற்பவும் ஒரு வழி முறையை வகுத்துச் சென்ற நம் முன்னோரின் ஆழ்ந்த அறிவு, கூர்த்த மதி முன் எச் சரிக்கை, தவறுகள் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் எடுத்துக்கொண்ட பாது காப்பு முறைகள் நூல்கள் வழி அறி யும் நம்மை வியப்பில் மூழ்க வைக் கின்றன.

இன்று முடியாட்சிக்குப் பதிலாக மக்களாட்சி என்ற ஒன்றை வகுத் துக் கொண்டிருக்கின்றோம், என் பது தவிர பொதுவான ஆட்சி முறையின் அங்கங்களில் பெருத்த வேறுபாடு இருப்பதாகத் தோன்ற வில்லை.

இவ்வளவு விரிவான வழி முறைகள் வகுக்கப் பெற்றதன் அடிப்படைக் காரணம் ஒன்றே ஒன்றுதான்.

அதுதான் ஆட்சி அறநெறி முதற்று எல்லா நிலைகளிலும் அறம் நிலவ வேண்டும். அரசனுக்கும் பொது மக்களுக்கும் இடையே அன்பின் அடிப்படையில் மதிப்பு மிக்க ஓர் இணைப்பு இருக்க வேண் டும் என்பது.

மக்களுடைய நன்மையே மன்னனு டைய நன்மை; அதாவது அரசினு டைய ஸ்திரத்தன்மை ஆகும். இத்தகு பெருமைக்குரிய அசைக்க முடியாத நிலைக்க அறநெறியே அடிப்படை ஆகும்.

இந்தக் குறிக்கோள் நிறைவேறா மற் போகுமாயின், முன்னர் எடுத்துக்காட்டிய அத்துணைக் குழுக்களும், ஆயங்களும், முன்னேற் பாடுகளும் வீண் என்றுதான் முடியும்.

எனவே இவ்வளவு விரிவான ஒரு ஆட்சி முறையை வகுப்பதன் நோக் கமாகவும், ஆணி வேராகவும் அமைந்திருப்பது அறத்தின் அடிப் படையில்தான் அரசு மக்களுக்கு நன்மை, நீதி வழங்க வேண்டும் என்பது.

இக்கருத்தினை நமக்கு இப்போது கிடைத்திருக்கும் எல்லாப் பழந்தமிழ் நூல்களிலும் மிகத் தொன்மை யதான புறநானூற்றில் உள்ள ஒரு பாடல் மிக அருமையாக எடுத்து உணர்த்தும்-

'வேந்து மேம்பட்ட பூந்தார் மாற!
கடுஞ் சினத்த கொல் களிறும் கதழ்
பரிய கலிமாவும்,
நெடுங் கொடிய நிமிர் தேரும்,
நெஞ்சு உடைய புகல் மறவரும்
என
நான்குடன் மாண்டது ஆயினும்,
மாண்ட
அறநெறி முதற்றே, அரசின்
கொற்றம்
அதனால் 'நமர்' எனக் கோல்
கோடாது
'பிறர்' எனக் குணம் கொல்லாது,
ஞாயிற்று அன்ன வெந்திறல்
ஆண்மையும்,
திங்கள் அன்ன தண் பெருஞ்
சாயலும்,
வானத்து அன்ன வண்மையும்,
மூன்றும்
உடையை ஆகி...
நீ நீடு வாழிய நெடு வந்தகை!'
(புறநானூறு: 55 (7-18)

(சினத்த - சினம்மிக்க; கதழ்

விரைவு; பரிய நடை உடைய

கலி - செருக்கு; நெஞ்சு - ஆண்மைத் தருக்கு

புகல் - போர் விரும்பும்; மாண்டது - மாட்சிமைப் பட்டது

கொற்றம் - வெற்றி

நமர் - அரசின் உறுப்பினரான பரிசனத்தார்

கோல் கோடல் - நீதி தவறுதல்

பிறர் - பரிசனங்கள் அல்லாத பிறர் - நாட்டு மக்கள்

குணம் - அவர்கள் வழக்கில் உள்ள நியாயங்கள்; கொல்லல்- புறக்கணித்தல்)

இப்பன்னிரண்டு அடிகளில் அருமையில் சிறந்த பல கருத்துக்களைக் காண்கிறோம்.

அரசனுடைய படைமாட்சியைப் பெரிதும் விதந்து பாடும் புலவர் அவ்வன்மை எவ்வளவுதான் உயர்ந்ததாக மாட்சிமைப் பட்டதாக இருப்பினும் அரசற்கு வெற்றி அமைவது என்பது பிற நாடுகளின் மீது போர் தொடுத்து அவற்றை அகப்படுத்துவதில் இல்லை.

வெற்றி அமையும் விதம், அரசன் மேற்கொள்ளும் முயற்சிகளில் அறத்திற்கு முதலிடம் கொடுப்பதில் தான் அமையும்.

மக்களுக்கு அச்சம் எழாதவாறு காத்தல் காவலன் கடன் எனப் பெரிய புராணம் கூறும். அவற்றுள் ஒன்று பரிசனத்தார்.

இப்பரிசனத்தார் அரசனின் உறவுச் சுற்றமாக ஆட்சிப் பொறுப்பில் அமைந்துள்ள அலுவலாளர்களாக இருக்கலாம். அவர்களையே நமர் என்று இங்கு குறிக்கின்றார்.

தம்மவர் என்பதற்காகத் தவறு இழைத்த அவர்களைத் தண்டிக்காது விடுவது கோல் கோடுவதாகும்.

'தெருளும் நல் அறமும்,
மனச்செம்மையும்
அருளும் நீத்தபின் ஆவது
உண்டாகுமோ?'
(கம்பன் 1417)

> மற்றவர்களிடம் பழகும் விதத்தையும் ஒழுக்கத்தையும் சிறு வயதிலேயே நன்றாக ஒருவன் கற்றுக் கொண்டானானால் அவனே வாழ்க்கையில் பெரிய மனிதன் ஆவான்.
>
> – தந்தை பெரியார்

'அறத்தினால் அன்றி அமரர்க்கும்
அருஞ்சமம் கடத்தல்
மறத்தினால் அரிது...'
(கம்பன் 7267)

அறநெறி ஒழுகாப் பரிசனத்தால், அவர்களைத் தண்டிக்காத அரசனால் அல்லல் படும் மக்கள் அழுத கண்ணீர் அரசன் செல்வத்தைத் தேய்க்கும் படை என்று வள்ளுவர் கூறுவார்.

மேலும் அறநெறி முதற்றே என்று கொண்டு, கோல் ஓச்சும் அரசன், பகைவரை, தீயவரைத் தெறுதலில் ஞாயிறு போன்று வெய்யவனாக நாட்டு மக்களிடத்துப் பரிவு காட்டுதலில் திங்கள் போன்று தண்ணிய சாயலனாக, கடப்பாடு வேண்டாது, மக்கட்கு நலமே விளைவிப்பதில் பொழிவதில் வானம் போன்ற வண்மையனாக விளங்க வேண்டும் என்பார்.

இவ்வாறு அரசிற்குக் குறியீடாக விளங்கும் காரணத்தால் தான் ஞாயிறும், திங்களும் வானமும் (மழை) இளங்கோ அடிகளால் மங்கல வாழ்த்தில் சிறப்பு இடம் பெற்றன.

இவற்றை எல்லாம் சற்று சிந்தித்துப் பார்த்தால் பழங்காலத்திற்குத்தான் இவை பொருந்துவன, இக்காலத்திற்கு ஏலா என்று சொல்ல முடியாது என்பது விளங்கும்.

கொற்றவன் வெற்றிக்கு ஆணி வேராக இருப்பது நடுவு நிலைமை தான்; ஆட்சியின் இருக்கும் அரசன் தன் குடிமக்களுடைய நலத்திற்காகத்தான் அரசப் பொறுப்பில் உள்ளான். அவன் தன் கடமை ஆற்றும் பொழுது, வேண்டியவர் வேண்டாதவர் என்பது இன்றி அனைவர்க்கும் நன்மை செய்ய வேண்டும். அப்படிப்பட்டவன் தான் அரசனாக இருப்பதற்குத் தகுதி வாய்ந்தவன்.

புறநானூற்றுக் காலக் கருத்து

'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகு' என்பது. இதன்படி மக்கள் உடம்பு ஆக மன்னன் உயிர் ஆகிறான். கம்பனோ புரட்சிகரமான கருத்து ஒன்றை அமைக்கின்றான்.

'செயிரிலா உலகினில் சென்று
நின்று வாழ்
உயிரெலாம் உறைவதோர் உடம்பும்
ஆயினான்.'
(கம்பன் - 177)

என்பதுதான் அது. மக்களின் ஒருமித்த கருத்தின்படி தான் அரசு இயங்க வேண்டும் என்பது எத்துணைப் புரட்சிகரமானது என்பது முடியாட்சிக் காலத்தில் தோன்றிய கம்பன் தொடரால் நன்கு விளங்கும்.

முடியாட்சி நடைபெறும் காலத்து அமைச்சர்கள் முதலானோர் அரசனை மகிழ்விப்பதற்காக அவனுக்கு எது பிடிக்குமோ, அதனை மட்டுமே சொல்பவர்களாக இருந்தார்கள் என்று சொல்வதற்கும் இல்லை.

மாறாக அரசனுக்குப் பிடிக்குமோ, பிடிக்காதோ என்று கருதாது நாட்டிற்கு நாட்டு மக்களுக்கு எது நல்லதோ, அறத்தின் வழாது எதனைச் செய்ய வேண்டுமோ அதனைக் கூறி செயல்படுத்துபவர்களாகவே இருந்தனர்.

'தம் உயிர்க்கு இறுதி எண்ணார்
தலைமகன் வெகுண்ட போதும்,
வெம்மையைத் தாங்கி, நீதி
விடாது நின்று, உரைக்கும் வீரர்
செம்மையின் திறம்பல் செல்லாத்
தேற்றத்தார் தெரியும் காலம்
மும்மையும் உணர வல்லார்
ஒருமையே மொழியும் நீரார்'

'நல்லவும் தீயவும், நாடி நாயகற்கு
எல்லைஇல் மருத்துவன் இயல்பின்
எண்ணுவார்,
ஒல்லை வந்து உறுவன உற்ற
பெற்றியின்

தொல்லை நல்வினை என உதவும் சூழ்ச்சியார்'
(கம்பன் - 1321, 22)

என்பனவற்றால் தெளிவாகும்.

இராமனுக்கு முடி சூட்டக் கருதி, மந்திரக் கிழவரது கருத்தையும் அறிய அவாவி அவை கூட்டிய பொழுது வருகை தந்த அமைச்சர்கள் மாண்பினைக் கம்பன் இவ்வாறு கூறுவான்.

ஆலோசனைக் கூட்டத்தில்,

"........... இராமனுக்கு அரசை நல்கி
பேதமைத்தாய் வரு பிறப்பை நீக்குறு
மாதவம் தொடங்குவான் வனத்தை நண்ணுவேன்
யாதுறும் கருத்து?".............
(கம்பன் 1343)

என வினவுகின்றான். இராமன் முடிசூடப் பெறுவான் என்பதனால் புரண்டு மீதிடப் பொங்கிய உவகையும், மன்னவன் பிரிவானே என்று விம்முறு நிலையும் எய்திய அமைச்சர்களுக்கு-

"இரண்டு கன்றினுக்கு இரங்கும் ஓர் ஆ......

உவமை ஆகக் கூறப் பெறுகிறது.

மன்னும் மன்னுயிர்க்கு
இராமனின் மன்னவர் இல்லை

என்று உன்னி அவன் கருத்துக்கு இசைவு தெரிவித்தனர்.

இராமனுக்கு முடி சூட்டக் கருதிய தயாரதன் அரசர்களுக்கு ஓலை போக்கி வந்த அவர்களை விரும்பி வரவேற்று, ஆதனத் திருத்தி அவரிடை அமர்ந்து தன் கருத்தைத் தெரிவிக்கின்றான். அவன் மொழிந்தனவற்றை, அமுது என விரும்பி ஏற்றனர் அரசர்கள்; 'அத்த' 'நன்று' என்று அன்போடு அறிவித்தனர்.

"மூ எழு முறைமை நம் குலங்களை முற்று உறப் போக்கிய அப்பூ எமு மழுவாளனைப் பொழுது போக்கிய சேவகனுக்கு ஆவது இவ் உலகம். இது அறனே ஆம்" என்றனர்.

ஆனால் தயரதனோ அவர்களை நோக்கி

'மகன் வயின் அன்பினால் மயங்கி, யான் இது
புகல, நீர் புகன்ற இப் பொம்மல் வாசகம்
உவகையின் மொழிந்ததோ?
உள்ளம் நோக்கியோ?
தகவு என நினைந்தது
எத்தன்மையால்'
(கம்பன் 1391)

என்று வினவுகிறான்.

வேத்தவையோர் விடையாக,

'மனுக் குலத்தில் தோன்றியவனே' நின் மகனிடத்தில் மேன்மை பொருந்திய மெய்யுணர்வு, பெரியோர்ப் போற்றும் நற்பண்பு, தானம், தருமம், தகவு, ஞானம் என்றும் நிலை பெற்றுள்ளன. மேலும் அவன் சிறந்த ஒப்புரவாளன். உயிர்களிடத்து அவன் எவ்வாறு அன்புடையவனாய் இருக்கின்றானோ, அவ்வாறே அவையும் அவனிடம் மிக்க அன்புடையன. ஆக அவன் அரசன் ஆதலே அறம்' எனக் கூறினர்.

அரசுப் பொறுப்பினர் இவ்வாறு அமைச்சரிடை, சார்ந்தார் இடைத் தம் கருத்தைக் கூறி அவர் கருத்தை அறிய அவாவுதல் உண்டு என்று அறியலாம்.

"தீய்ந்த திரு நகரினை முற்றும் புதுப்பிக்க ஆணை ஏவி, முன்னையினும் அழகு உடையதாக இலங்கை மாநகர் அமைத்த தச்சற்கு உதவி, 'பண்டையர், பண்டிதர், கிழவர், பண்பினர் சார்க' என ஏவி அவை கூட்டுகிறான் இராவணன்.

பின் சூழ்ச்சியின் கிழவரை நோக்கி 'இனி, செய்யத் தருவது எது' என வினவுகிறான்.

கூடி இருந்தார் தம்தம் கருத்துக்களைக் கூறுகின்றனர். இராவணன் அடுத்த போர் யாவற்றிலும் உடன் இருந்து வெற்றி ஈட்டித் தந்த, வீரத்தில் சிறந்த கும்ப கருணன் "சிட்டர் செயல் செய்கிலை. ஒருத்தன் மனை உற்றாளை மறை துறந்து சிறை வைத்தாய். புன் தொழிலால் இசை பெறல் இயலுமா? காமம் பேணும் நாம் பெற விரும்புவது கொற்றம்" என்றெல்லாம் இடித்துரைக்கின்றான். எனினும் அவன் போரிடை இராவணற்குப் பெரிதும் உதவியாக இருந்தான். அற வேட்கை வேறு பாசப் பிணைப்பு வேறு என்பதற்கு இலக்காகி நின்றான்.

இதேபோல்,

அரக்கற்கு இளையான் அடைக்கலம் வேண்டி வருகிறான் என்பதனை அறம் வளர்த்த அண்ணல் அறிகிறான்.

பின் அருகில் இருந்த நண்பரை 'இப்பொருள் கேட்ட நீர் இயம்புவீர். சரண் புக வந்துள்ள அரக்கன் நம் கைப்புகல் பாலனோ? கழியற் பாலனோ?' என்று வினவுகிறான். அவரவர்தம் கருத்துக்களை அறியப் பெரிதும் அலாவுகின்றான்.

இராமண் கருத்துக்கு இயையக் கூறுபவன் அனுமன் ஒருவன் மட்டுமே. பிறர் அவன் வரவை விரும்ப இல்லர்; அடைக்கலம் கொடுத்தல் ஆகாது எனவும் விளம்புகின்றனர். தலைவன் கருத்துக்கு மாறாகவே கூறுகின்றனர்.

எனினும் இராமன் அடைக்கலம் ஈதலின் சிறப்பைப் பெரிதும் பாராட்டிக் கூறி, பகைவனுக்கும் இரக்கம் காட்டிய புறவு ஒன்றன் கதை கூறி, 'துன்னினான் சூழ்ச்சியால் உயிர் துறக்க நேரினும் அதுவே விழுமிது என்றும், புகல் புகுவோர் பூரியர் ஆயினும் ஆர் உயிர் கொடுத்துக் காத்தலே அற நெறி' என்றும் கூறுகிறான்.

"ஈதலே கடப்பாடு" என்று இறுதியாக உறுதியாக அவன் கூறிய பின்னரே வீடணன் சேர்த்துக் கொள்ளப்படுகின்றான்.

ஆக, அரசு பீடம் ஏறியார் அமைச்சர் பெரியோர் கருத்தினைக் கேட்டறியாது தன்னிச்சையாகச் செயல் மேவினர் இலர் என்று அறிகிறோம்.

எடுக்கும் முடிவுகள் யாவும் அறச் சார்பின ஆகவே அமைந்தன என்று நூல் வழி தெளிகிறோம்.

அரசின் செயல்பாடுகள் அனைத்தும் **அறநெறி முதற்று** என்று அமையக் காண்கிறோம்.



# நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

*– மாண்புமிகு முதல்வர் ஆணை*

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், வேளாண்மைக்குப் பயன்படாத பாழ்பட்ட நிலங்களில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அவைகள் விவசாயத்திற்கு உகந்த நிலங்களாக மாற்றி அமைப்பதற்குத் திட்டம் ஒன்று தீட்டிச் செயல்படுத்த வேண்டும் என்று ஏற்கெனவே கருத்து தெரிவித்து இருந்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட கருத்திற்கேற்ப, தமிழக வேளாண் துறை ஏற்கெனவே திருநெல்வேலி கட்ட பொம்மன் மாவட்டம் மற்றும் சிதம்பரனார் மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் வெற்றி கரமாகச் செயல்படுத்தப்பட 'நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்' ஒன்றினையும் Danida நிறுவன உதவியோடு விரிவுபடுத்தி, நடப்பு ஆண்டு முதலாகக் காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களிலும், 11,000 எக்டேர் நிலப்பரப்பினை 13.56 கோடி ரூபாய் செலவில் சீர்செய்யும் பணியினை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின்படி, DANIDA நிறுவனத்தின் உதவியுடன் 3 மாவட்டங்களில் அமைந்துள்ள 83 கிராமங்களில் செயல்படுத்தப் படவுள்ள இந்தத் திட்டம் காமராசர் மாவட்டம், அருப்புக்கோட்டையையும், பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர் மாவட்டம், மானாமதுரை யையும், இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத் தையும் தலைமையிடங்களாகக் கொண்டு செயல்படும்.

இம்மாவட்டங்களில், மண் அரிப்பு, நிலத்தின் பயன்பாடு குறைந்து போதல் ஆகியவை வேகமாக வீசும் காற்றின் விளைவாக அதிக அளவில் நிகழ்ந்துள்ளன. புதிதாக மேற்கொள்ளப்பட இருக்கும் 'ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் (Integrated Catchment Development Scheme) மூலமாக, இப்பகுதிகளில் வேகமான காற்றின் காரணமாக, மண் அரிப்பு மற்றும் நிலம் பாழ்ப்படுதல் ஆகியவற்றைத் தடுத்து நிறுத்தி, இந்நிலங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல், கிணறு வெட்டுதல், மரக்கன்றுகள் வளர்த்தல் போன்ற பயன் அளிக்கக்கூடிய வேளாண் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப் படும்.

விவசாயிகளுக்குப் பெருமளவில் பயன் தரும் இந்தத் திட்டத்தினை விரைந்து செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித் துள்ளார்.




நான் ஒரு பகுத்தறிவுவாதி என்று கருதிக்கொண்டிருக்கிறேன். பகுத்தறிவுக்கு ஒத்த எதுவும் எனக்கு விரோதம் அல்ல. பகுத்தறிவுக்கு ஒவ்வாத எதுவும் எனக்கு நட்பும் அல்ல. இதுதான் எனது நிலை.


இன்று நமக்கு வேண்டியது அறிவு வளர்ச்சி. அறிவு வளர்ச்சி பெற்று, ஒவ்வொரு துறையிலும் முன்னேற வேண்டும். அறிவு ஆட்சி செய்தல் வேண்டும்.

மனிதன் உலகில் தன் சுயமரியாதையை தன்மானத்தை உயிருக்குச் சமமாகக் கொள்ள வேண்டும்.

# உலகத் தமிழ் மாநாட்டிற்குத் தஞ்சை தயாராகிறது



தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்படும் கலையழகுடன் கூடிய கட்டடம்.



தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக நிர்வாகக் கட்டடத்தின் முகப்பில் திருவள்ளுவர் மண்டபம் அமைக்கும் பணி.



உலகத் தமிழ் மாநாடு தொடக்க விழா மற்றும் நிறைவு விழா நடைபெறும் தஞ்சாவூர் அன்னை சத்தியா விளையாட்டரங்கில் நவீன முறையில் விழா மேடை அமைக்கப்படுகிறது.



தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக நுழைவு வாயிலின் ஒரு பகுதியில், மகரத் தோரணவாயில் அமைப்பதற்கான கருங்கல் சிற்பங்கள் வடிவமைக்கப்படுகின்றன.



தஞ்சாவூர் சுற்றுச்சாலை அமைக்கும் பணி நடைபெறுகிறது.

## எட்டாவது

## உலகத் தமிழ் மாநாடு

# மாணவர் மலர் - பொதுமலர் கட்டுரை, கவிதை, ஓவியப் போட்டிகள்-முடிவுகள்

**த**மிழ்நாடு அரசு, எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை **1.1.95** முதல் **5.1.95** வரை தஞ்சாவூரில் சிறப்புற நடத்தத் திட்டமிட்டுள்ளது. இதுவரை இல்லாத வகையில் இம் மாநாட்டில் தமிழகத்தின் எதிர்காலச் சமுதாயச் சிற்பிகளான மாணவச் செல்வங்களை முழுமையாக ஈடுபடுத்தும் வகையிலும், அவர்களது ஆற்றல்களையும், திறமைகளையும் வெளிக்கொணரும் வகையிலும் கட்டுரை, கவிதை, ஓவியப் போட்டிகள் நடத்தப் பெற்றன.

இப்போட்டிகளில் பரிசு பெறும் கட்டுரைகள், கவிதைகள், ஓவியங்கள் ஆகியவற்றைக் கொண்டு திக்கெட்டும் மணம் பரப்பும் வண்ண மலராக ஓர் அரிய மலரை "எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டு மாணவர் மலராக" வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் வருமாறு:

**பள்ளி மாணவர்கள் ஓவியப் போட்டி**

பள்ளி இறுதி வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் இப்போட்டியில் கலந்து கொண்டனர். தமிழர் தம் பண்பாடு, கலை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கலை நயத்தை உணர்த்தும் வகையில், ஓவியங்கள் அமைய வேண்டுமென அறிவிக்கப்பெற்றது. அதற்கொப்பத் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும், புதுவை மாநிலத்திலிருந்தும் **2,768** ஓவியங்கள் வரப் பெற்றன.

அரசு இதற்கென அமைத்த நடுவர் குழுவால், பட்டியலில் கண்ட மாணவர்களின் ஓவியங்கள் முறையே முதல், இரண்டாம், மூன்றாம் பரிசுகளுக்குரியனவாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவை அன்றியும் பன்னிரண்டு சிறந்த ஓவியங்கள் மலரில்

## புதுப்பொலிவு பெறும் தஞ்சாவூர்க் கலைக்கூடம்

தஞ்சாவூரில் நடைபெறவுள்ள எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, தஞ்சை அரண்மனை வளாகத்தில் உள்ள கலைக் கூடத்தை அழகுபடுத்த தமிழக அரசு ரூ.12 இலட்சத்து 54 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. கலைக்கூடம் அழகுபடுத்தப்படும் பணிகள் தற்பொழுது விரைவாகச் செயல்பட்டு வருகின்றன.

இதில் கலைக்கூடத்தில் உள்ள செப்புத் திருமேனிகளுக்குக் கண்ணாடிக் காட்சிப் பெட்டிகள் தயாரிக்க ரூ.3 இலட்சத்து 2 ஆயிரமும், கலைக்கூடம் மற்றும் சங்கீத மகால் கட்டடங்களில் புதிய மின் விளக்கு அமைக்க ரூ.3 இலட்சத்து 21 ஆயிரமும், நாயக்கர் தர்பார் ஹாலில் உள்ள சுதைச் சிற்பங்களை அழகுபடுத்த ரூ.3 இலட்சத்து 81 ஆயிரமும், கலைக்கூடம் மற்றும் சங்கீத மகால் கட்டடத்திற்குப் புதிய வண்ணம் தீட்ட ரூ.2 இலட்சத்து 50 ஆயிரமும் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொதுமக்களும், வெளிநாட்டவரும் தஞ்சைக் கலைக்கூடத்தைப் பார்த்து மகிழும் வகையில் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகளை மாமல்லபுரம் கலைப் பயிற்சிக் கல்லூரி வல்லுநர்கள் செய்து வருகிறார்கள்.

மேலும், கலைக்கூடக் காட்சியரங்கில் தஞ்சாவூர் பெரியகோவில், நாகூர் தர்கா, வேளாங்கன்னி மாதாகோவில் ஆகியவை நெட்டியால் கலை நுணுக்கத்தோடு வடிவமைக்கப்பட்டு பிரம்மாண்ட அளவில் காட்சிக்கு வைக்கப்படவுள்ளது.

*இடம் பெறுவதற்கெனவும் தெரிவு செய்யப் பட்டுள்ளன.*

### *கல்லூரி மாணவர்களுக்கான ஓவியப் போட்டி*

*கல்லூரி மாணவர்கள் அனைவரும் இப் போட்டியில் கலந்துகொண்டனர். தமிழர் தம் பண்பாடு, கலை ஆகியவற்றை அடிப்படை யாகக் கொண்டு, கலைநயத்தை உணர்த்தும் வகையில், ஓவியங்கள் அமைய வேண்டுமென அறிவிக்கப்பெற்றது. அதற்கொப்பத் தமிழ கத்தின் பல மாவட்டங்களிலிருந்தும், புதுவை மாநிலத்திலிருந்தும் 270 ஓவியங்கள் பெறப் பட்டன.*

*அரசு இதற்கென அமைத்த நடுவர் குழு வால், பட்டியலில் கண்ட மாணவர்களின் ஓவியங்கள் முறையே முதல், இரண்டாம், மூன்றாம் பரிசுகளுக்குரியனவாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவை அன்றியும் பன்னிரண்டு சிறந்த ஓவியங்கள் மலரில் இடம் பெறுவதற்கெனவும் தெரிவு செய்யப் பெற்றன.*

*கல்லூரி மாணவர்களுக்கான ஓவியப் போட்டியில் முதற் பரிசுக்குரியதெனத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஓவியமும், பள்ளி மாணவருக்கான ஓவியப் போட்டியில் முதற் பரிசுக்குரியதெனத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஓவியமும், முறையே மாணவர் மலரின் மேலட்டையையும், பின்பக்க அட்டையையும் அலங்கரிக்கவுள்ளன.*

### *கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி*

*கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் முதுகலை வரை பயிலும் மாணவர்களுக் கெனக் கட்டுரைப் போட்டி அறிவிக்கப் பெற்றது. மாணவர் கட்டுரை எழுதுவதற் கென 10 பொருண்மைகள் அளிக்கப்பட்டன. தமிழகத்திலுள்ள கல்லூரிகளிலிருந்தும், புதுவை மாநிலத்திலிருந்தும் 195 கட்டுரைகள் வரப்பெற்றன. ஒவ்வொரு பொருண்மை யிலும் மிகச் சிறந்த இரண்டு கட்டுரைகள், அரசு இதற்கென நியமனம் செய்த நடுவர் குழுவால், முதலாம், இரண்டாம் பரிசுக் குரியவையாகத் தெரிவு செய்யப்பெற்றன.*

*இக்கட்டுரைகள் அனைத்தும் உலகத் தமிழ் மாநாட்டின்போது வெளிவரும் மாணவர் மலரில் இடம் பெறுகின்றன.*

### *கல்லூரி மாணவர்கள் கவிதைப் போட்டி*

*கல்லூரி மாணவர்களுக்கென மரபுக் கவிதை, புதுக்கவிதை எனும் தலைப்புகளில் கவிதைப் போட்டி அறிவிக்கப் பெற்றது.*

*"யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் தலைப்பில் மரபுக் கவிதைகளையும், "இனி ஒரு விதி செய்வோம்" எனும் தலைப்பில் புதுக் கவிதைகளையும், 48 வரிகளில் அமையு மாறு எழுதி அனுப்ப வேண்டுமென மாண வர்கள் அறிவிக்கப்பெற்றனர்.*

*மரபுக் கவிதையின் கீழ் 30 கவிதைகளும்,*

புதுக்கவிதையின் கீழ் 129 கவிதைகளும் வரப்பெற்றன.

அரசு இதற்கென அமைத்த நடுவர் குழுவால் பட்டியலில் கண்டவாறு ஒவ்வொரு தலைப் பிலும் முறையே முதல், இரண்டாம், மூன்றாம் பரிசுக்குரியவையாக, மும்மூன்று கவிதைகள் தெரிவு செய்யப்பெற்றன.

இவை அனைத்தும் உலகத் தமிழ் மாநாட்டு மாணவர் மலரில் இடம் பெறவுள்ளன.

**பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவர்கள் கட்டுரைப் போட்டி**

தமிழகத்தின் பல்கலைக் கழகங்களில் எம்ஃபில், பி.எச்டி., பயிலும் ஆராய்ச்சி மாண வர்களுக்கான கட்டுரைப் போட்டி அறிவிக் கப்பெற்றது. இம்மாணவர்கள் கட்டுரை எழுதுவதற்கென 6 பொருண்மைகள் அறி விக்கப்பெற்றன.

தமிழகத்திலுள்ள கல்லூரிகளிலிருந்தும், புதுவை மாநிலத்திலிருந்தும் 36 கட்டுரைகள் வரப்பெற்றன. ஒவ்வொரு பொருண்மை யிலும் மிகச் சிறந்த இரண்டு கட்டுரைகள், அரசு இதற்கென நியமனம் செய்த நடுவர் குழுவால், முதலாம், இரண்டாம் பரிசுக் குரியவையாகத் தெரிவு செய்யப்பெற்றன.

பரிசு பெற்ற கட்டுரைகள் உலகத் தமிழ் மாநாட்டின்போது வெளியிடப்படும் மாணவர் மலரில் இடம் பெறவுள்ளன.

**சிறப்பு மலர்**

தஞ்சைத் தரணியில் நடைபெறும் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில், பொதுமக்களும் பங்கேற்க வேண்டும், அவர் தம் சிந்தனை களும், கருத்துக் கருவூலங்களும் அணி செய்ய வேண்டும் என்னும் உயரிய நோக்கில் அரசு சிறப்பு மலரொன்றை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்நோக்கில் பொதுமக்களுக் கான கவிதைப் போட்டி அறிவிக்கப்பெற்றது. மரபுக் கவிதையின் கீழ் “உலகமெலாம் தமிழோசை” என்னும் தலைப்பும், புதுக் கவி தையின் கீழ் இன்று புதிதாய்ப் பிறந்தோம்” என்னும் தலைப்பும் அளிக்கப்பெற்றன. அத் துடன் கவிதைகள் 48 வரிகளில் அமைய வேண்டுமெனவும் அறிவிக்கப்பெற்றது.

“உலகமெலாம் தமிழோசை” எனும் மரபுக் கவிதைத் தலைப்பில் 400 கவிதைகளும், “இன்று புதிதாய்ப் பிறந்தோம்” எனும் புதுக் கவிதைத் தலைப்பில் 609 கவிதைகளும் வரப்பெற்றன. அரசு இதற்கென அமைத்த நடுவர் குழுவால், ஒவ்வொரு தலைப்பிலும் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுக்குரியனவாக மும்மூன்று கவிதைகள் தெரிவு செய்யப்பெற்றன.

பரிசு பெற்ற கவிதைகள் அனைத்தும் சிறப்பு மலரில் இடம் பெறவுள்ளன.


அரசுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறைச் செயலாளர் மறறும சிறப்பு மலர்க்குழு உறுப்பினர் செயலர் திரு சா.பா. இளங்கோவன் அவர்கள், மேற்கண்ட போட்டிகளில் பரிசு பெற்றோர் பற்றி அறிவித்துள்ளார். அதன்விவரம் வருமாறு:

## தஞ்சை நகர் கல்லணைக் கால்வாய் அழகுபடுத்தும் திட்டம்

**த**ஞ்சை நகரில் வருகின்ற 1995-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறவிருக்கும் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, தஞ்சை நகரில் செல்லும் கல்லணைக் கால்வாயை அழகுப்படுத்த தமிழ்நாடு அரசால் ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொதுப்பணித்துறை கல்லணைக் கால்வாய் கோட்டத்தால் மேற்காணும் நிதியைக் கொண்டு தஞ்சை நகரில் எல்லைக்குட்பட்ட கல்லணைக் கால்வாயின் கரைகளைச் சுத்தப்படுத்தி படித் துறைகள் சீர் செய்யப்பட்டு அழகுபடுத்தப் பட்டுள்ளன.

படித்துறைகளில் பாதுகாப்பைக் கருதி பாதுகாப்புத் தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. கரைகளில் தேவையான இடங்களில் கைப்பிடிச் சுவர்கள் கட்டப்பட்டு வருகின்றன. கைப்பிடிச்சுவர் மற்றும் கால்வாயின் இடைப்பட்ட பகுதிகளைச் சுத்தமாக வைத்திருக்க கைப்பிடிச் சுவரின் மேல் முள்வேலி அமைக்கப்பட்டு வருகின்றது. தவிர நகரின் எல்லைக்குள் கரையின் இரு ஓரங்களிலும் தேவையான இடங்களில் பூங்காக்கள் உருவாக்கப்பட்டு, வண்ண விளக்குகளால் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.



அலங்கார நுழைவு வாயில்

**பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி முடிவுகள்**

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டைச் சிறப்பிக்கும் வகையிலும், மாணவர்களையும், எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் ஈடுபடுத்தி அவர்களிடமுள்ள பல்வேறு ஆற்றல்களை வெளிக் கொணரும் வகையிலும் பள்ளி மாணவர்களுக்கு ஓவியம், பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகள் நடத்தப்பெற்றன.

பள்ளி மாணவர்களுக்கும், கல்லூரி மாணவர்களுக்கும் 'இருபத்தொன்றாம் நூற்றாண்டை நோக்கி' என்னும் தலைப்பில் பேச்சுப் போட்டிகள் நடத்தப்பெற்றன. பள்ளிக்கல்வி இயக்குநரும், கல்லூரிக் கல்வி இயக்குநரும் இப்பேச்சுப் போட்டிகளை இரண்டாம் சுற்று வரையில் நடத்தி முறையே பள்ளி மாணவர்கள் ஐவரையும் இறுதிச் சுற்றுப் பேச்சுப் போட்டியில் கலந்துகொள்வதற்காகத் தெரிவு செய்து அனுப்பினார்கள்.

**போட்டி நடுவர்கள்**

பேச்சுப் போட்டியின் இறுதிச் சுற்று **21.11.94** திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி.சோமசுந்தரம் அவர்கள் தலைமையில், சென்னை இராணி மேரி கல்லூரியின் பொன் விழாக் கலையரங்கில் நடைபெற்றது. இராணிமேரி கல்லூரி முதல்வர் அனைவரையும் வரவேற்று உரைநிகழ்த்தினார். எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுத் தனி அலுவலர், பேச்சுப்போட்டியின் விதிமுறைகளை விளக்கி உரை நிகழ்த்தினார்.

இறுதிச் சுற்றுப் பேச்சுப் போட்டிக்கு,

1. திரு கிருஸ்துதாஸ்காந்தி, இ.ஆ.ப.,
2. கவிஞர் புலமைப்பித்தன்
3. முனைவர் தி. இராச கோபாலன்
4. முனைவர் சாரதா நம்பி ஆரூரன்

ஆகியோர் நடுவர்களாக அமர்ந்தனர்.

இறுதிச்சுற்றுப் பேச்சுப் போட்டியில் கீழ்க்குறிப்பிட்ட மாணவர்கள் பரிசுக்குரியவர்களாகத் தெரிவு செய்யப்பெற்றனர். போட்டி முடிவுகளைக் கவிஞர் புலமைப்பித்தன் அவர்கள், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் முன்னிலையில் அறிவித்தார்.

பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம் குறித்து தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறைச் செயலர் திரு சா.பா. இளங்கோவன் அவர்கள் தெரிவித்ததாவது:

**பள்ளி மாணவர்கள்**

**முதற் பரிசு**

**செல்வன் கே. கமலக்கண்ணன்**
அரசு ஆண்கள் மேநிலைப் பள்ளி, திருச்செங்கோடு.

**இரண்டாம் பரிசு**

**செல்வி சுல்தானா தில்ரஷ்**
விஜய வித்தியாலயா
மேநிலைப்பள்ளி
தருமபுரி

**மூன்றாம் பரிசு**

**செல்வன் எஸ். சிராஜ்தீன்**
தேசிய மேநிலைப்பள்ளி,
மன்னார்குடி

**கல்லூரி மாணவர்கள்**

**முதற் பரிசு**

**செல்வன் கே. கற்பகராஜ்**
குற்றவியல் துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை

**இரண்டாம் பரிசு**

**செல்வி கற்பகம்**
எப்.பி.சி. மகாலட்சுமி கல்லூரி,
தூத்துக்குடி

**மூன்றாம் பரிசு**

செல்வன் எம். சத்தியன்
அரசினர் கலைக் கல்லூரி,
மேலூர்.

**சிறப்பு மலர் கவிதைப் போட்டி**

**மரபுச். கவிதைகள் (பொதுமக்கள்)**

'உலகமெலாம் தமிழோசை' என்ற தலைப்பில் கவிதை எழுதிப் பரிசு பெற்றோர் விவரம் வருமாறு:

**முதற் பரிசு**

**கவிராஜ யோகி. கபிலவாணன், எம்.ஏ.**
சென்னை - 600 021

**இரண்டாம் பரிசு**

**கவிஞர் இளமாறன்**
புதுக்கோட்டை - 622 001

**மூன்றாம் பரிசு**

**திரு வீ.ம. இளங்கோவன்**
இராமநாதபுரம் - 623 535

**புதுக் கவிதை (பொதுமக்கள்)**

'இன்று புதிதாய்ப் பிறந்தோம்' என்னும் தலைப்பில் எழுதிப் பரிசு பெற்றோர் விவரம் வருமாறு:

**முதற் பரிசு**

**கவிஞர் இலா. மோகனபரியன்**
மதுரை - 10

**இரண்டாம் பரிசு**

**திரு வாசவன்**
தஞ்சாவூர் - 613 001

**மூன்றாம் பரிசு**

**கவிமாமணி ஆரூர் தமிழ்நாடன்**
திருவாரூர்

**மாணவர் மலர் கவிதைப் போட்டி**

**மரபுக் கவிதை**

**பரிசு பெற்ற மாணவர்கள்**

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னுந் தலைப்பில் எழுதியதில் பரிசு பெற்றோர்:

**முதற் பரிசு**

**தி. தமிழ்க்கொடி, பி.லிட்.,**
மயிலம்

**இரண்டாம் பரிசு**

**ஆ. காமராசு**
திருச்செங்கோடு - 637 207

**மூன்றாம் பரிசு**

**தி. பண்பழகி**
நாகப்பட்டினம் - 611 001

**மாணவர் மலர் கவிதைப் போட்டி**


**புதுக்கவிதை**

## தஞ்சாவூருக்குக் கூடுதலான மின்சாரம்

உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, தஞ்சைக்குத் தேவைப்படும் அளவிற்குக் கூடுதலாக மின்சாரம் கிடைக்க அனைத்து ஏற்பாடுகளையும் தமிழ்நாடு மின்சாரம் வாரியம் செய்து வருகிறது. மாநாட்டின்போது தஞ்சைக்குத் தேவைப்படும் கூடுதல் மின்சாரப் பளுவினைத் தாங்கும் விதத்தில் இங்கு செயல்பட்டு வரும் உயர் அழுத்த மின் மாற்றிகள் மாற்றப்பட்டு வருகின்றன.

உலகத் தமிழ் மாநாடு நடைபெறவுள்ள தமிழ்ப் பல்கலைக்கழக வளாகம், குடியிருப்புப் பகுதிகளில் இரண்டு கிலோமீட்டர், குறைந்த அழுத்த மின்பாதை மாற்றப்பட்டு, கூடுதல் திறன் கொண்ட மின்பாதை 19 கிலோமீட்டர் மற்றும் ஏழு கிலோமீட்டர் தூரத்திலும் புதிய மின்பாதை அமைக்கப்பட்டுள்ளது. உயர் அழுத்த மின்பாதையில் தடை ஏற்படும்போது மாற்று மின்பாதைகளில் மின்சாரம் வழங்க உயரழுத்தக் காற்றுத் தடைத்திறப்பான்கள் அமைக்கப்படுகின்றன. மேலும் 15 கிலோமீட்டர் தூரம் மின் அழுத்தக் குறைவுப் பாதை மாற்றப்பட்டுள்ளது.

தஞ்சை புறநகர்ச் சாலையில் புதிய பேருந்து நிலையம் அமையும் இடம் வரையில் புதிய மின்பாதை அமைக்கப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தைத் தெரு விளக்குகள் பராமரிப்புக் குறையற்ற மாவட்டமென அறிவிக்கப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



அலங்கார நுழைவு வாயில்

**பரிசு பெற்ற மாணவர்கள் விவரம்**

'இனி ஒரு விதி செய்வோம்' என்ற தலைப்பில் எழுதிப் பரிசு பெற்றோர் விவரம்:

**முதற் பரிசு**

**செ. முத்தரசப்பன்**
மதுரை - 1

**இரண்டாம் பரிசு**

**ந . சுந்தரமூர்த்தி**
மைலம்

**மூன்றாம் பரிசு**

**கோ. மணிவண்ணன்**
வேலூர் - 632 006

**மாணவர் மலர் ஓவியப்போட்டி**

ஓவியப் போட்டியில் பரிசு பெற்ற பள்ளி மாணவர்கள் விவரம்:

**முதற் பரிசு**

**ஜெ. உம்முசலீனா பேகம்**
தஞ்சாவூர்

**இரண்டாம் பரிசு**

**ச. சித்தார்த்தன்**
முசிறி - 621 211

**மூன்றாம் பரிசு**

**க. இராமஜெயம்**
ஆயங்குடிப்பள்ளம்

மாணவர் மலர் ஓவியப் போட்டியில் பரிசு பெற்ற கல்லூரி மாணவர்கள் விவரம்:

**முதற் பரிசு**

**பா. பாரிவள்ளல்**
பாண்டிச்சேரி

**இரண்டாம் பரிசு**

**ஆர். செந்தில் குமார்**
கும்பகோணம் - 2

**மூன்றாம் பரிசு**

**ஜே. சத்தியநாராயணன்**
கும்பகோணம் - 2

**மாணவர் மலர் கட்டுரைப் போட்டி**

பரிசு பெற்ற கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்கள் விவரம்:

**தமிழிலக்கியத்தில் வரலாற்றுக்கூறுகள்**

**முதற் பரிசு**

**ஆ. மேரி இமாகுலேட்**
தஞ்சாவூர் - 613 007

**இரண்டாம் பரிசு**
**இல்லை**

**தமிழிலக்கியத்தில் சமயப்பொறை**

**முதற் பரிசு**

**மா.கு. விநாயகம்**
தருமபுரம் - 669 001

**இரண்டாம் பரிசு**

**அ. செந்தில்குமரன்**
மைலம்

**நாட்டுப்புற இலக்கியங்கள் காட்டும் சமுதாய நிலை**

**முதற் பரிசு**

**எஸ். செல்வசுந்தரி**
மதுரை

தமிழரசு

**1.1.1995 இதழ் அதிகப் பக்கங்களுடன்**

**உலகத் தமிழ் மாநாட்டுச்**
**சிறப்பிதழாக மலர்கின்றது!**

★எண்ணம் கவரும் எழில்மிகு கட்டுரைகள்

★கண்ணைக் கவரும் வண்ணப் படங்கள்

★கருத்துக்கு விருந்தூட்டும் கவின்மிகு கவிதைகள்

★பக்கத்துக்குப் பக்கம் தமிழ் மணம் கமழும் இலக்கியத் துளிகள்

தமிழரசு

படிக்க - பயன்பெற - பாதுகாக்க


இரண்டாம் பரிசு

இல்லை

**பழமொழிகள் காட்டும் பண்பாடு**

முதற் பரிசு

இல்லை

இரண்டாம் பரிசு

இல்லை

**திரைப்படப் பாடல்களில் இலக்கியப்பாங்கு**

முதற் பரிசு

ஆ. கோதண்டபாணி
மயிலம்

இரண்டாம் பரிசு

ஆர். ஸ்ரீதர்
திண்டுக்கல்

**புதுக்கவிதைகளில் சமுதாய நோக்கு**

முதற் பரிசு

ச. மகாதேவன்
பாளையங்கோட்டை

இரண்டாம் பரிசு

இல்லை

**தமிழில் 'ஐக்கூ' கவிதைகள்**

முதற் பரிசு

மு. சண்முகராசன்
கும்பகோணம்

இரண்டாம் பரிசு

இல்லை

**தமிழும் கலைகளும்**

முதற் பரிசு

க. தமிழ்ச்செல்வன்
தருமபுரம்

இரண்டாம் பரிசு

இல்லை

**இன்றைய உரைநடை வளர்ச்சி**

முதற் பரிசு

இல்லை

இரண்டாம் பரிசு

இல்லை

இன்றைய நாடக வளர்ச்சி

முதற் பரிசு

பா. அருண்குமார்
கடலூர்

இரண்டாம் பரிசு

இல்லை

மாணவர் மலர்

ஆராய்ச்சி மாணவர்கள் கட்டுரைப் போட்டி

பரிசு பெற்றோர் விவரம்

"தமிழும் அறிவியலும்"

முதற் பரிசு
செள. கீதா
காந்திகிராமம் - 624 302

இரண்டாம் பரிசு

ம. கண்ணம்மாள்
தஞ்சாவூர் - 613 204

"தமிழ்ப் பயிற்று மொழிச் சிக்கல்களும் தீர்வுகளும்"

முதற் பரிசு

சே. செந்தமிழ்ப்பாவை
காரைக்குடி

இரண்டாம் பரிசு

அ. மாதவி
புதுச்சேரி - 14

"இக்காலப் புதினங்கள் கவிதைகள், நாடகங்களில் (ஏதேனும் ஒன்றில்) உணர்த்தப்பெறும் சமுதாயச் சிந்தனைகள்"

முதற் பரிசு

இராம. இரவிச்சந்திரன்
திருச்சி - 620 019

இரண்டாம் பரிசு

இரா. பெ. 'செயலெட்சுமி
தஞ்சாவூர்

"ஆன்மீகமும் அறிவியலும்"

முதற் பரிசு
இ. சேனாவரையன்
கோவை - 46

'வயலுக்கு நாற்றங்காலில் பயிரை வளர்ப்பார்கள். அதுபோல எதிர்கால வயலுக்கு ஏற்ற நாற்றங்கால் பயிராகப்பள்ளிப்பிள்ளைகள் இருக்கிறார்கள்.



இரண்டாம் பரிசு

இல்லை

"துறைதோறும் தமிழ் வளர்ப்போம்"

முதற் பரிசு

இல்லை

இரண்டாம் பரிசு

இல்லை

"தமிழிலக்கியங்களில் அறிவியல் கோட்பாடுகள்"

முதற் பரிசு

த. இளஞ்செழியன்
தஞ்சாவூர் - 613 005

இரண்டாம் பரிசு
ந. தேவி
சென்னை - 5

சிறப்பு மலரில் வெளியிடத் தெரிவு செய்யப்பெற்ற மரபுக் கவிதைகள் (பொதுமக்கள்) விவரம்:

"உலகமெலாம் தமிழோசை"

கவிக்கோ. ஞானச்செல்வன், எம்.ஏ., எம்.எட்.,
திருவாரூர் - 610 002

நல்லாசிரியர்
மு.கோவிந்தராசன், எம்.ஏ.,பி.எட்.,
பாலக்கோடு - 636 808

திரு சிவகுமாரன்
ஆலங்குடி - 622 301

கவிஞர் கே.ஏ. தியாகன்
திருவாரூர் - 610 002

திரு சிலம்பூர்க்கிழான் (செயராமன)
சிலம்பூர் அஞ்சல் நிலையம் - 608 901

திரு இரா. தனிக்கொடி
புதுக்கோட்டை - 622 001

திரு இரா. பொற்கைப் பாண்டியன்
மதுரை - 625 011

"உலகமெலாம் தமிழோசை"

திரு செவ்வேள்
புதுச்சேரி - 605 003

கவிஞர் இதயசந்திரன்
விக்கிரமசிங்கபுரம் - 627 425

செல்வி மங்கையர்க்கரசி
கோபாலசமுத்திரம்.

சிறப்பு மலரில் வெளியிடத் தெரிவு செய்யப்பெற்ற புதுக் கவிதைகள் (பொதுமக்கள்) விவரம்:

"இன்று புதிதாய்ப் பிறந்தோம்"

திரு நா.இர. தென்னன்
திருப்பத்தூர் - 635 601

திரு சூரிய மித்திரன்
காஞ்சிபுரம் - 631 501

திரு ஆர். சுக்கிரன்
சட்டக்காரன்பட்டி

திரு பாஸ்கர தேவேந்திர பூபதி
குபேரபட்டினம், பழனி.

திரு எஸ். அமலதாஸ் (தஞ்சை அமலன்)
தஞ்சாவூர் - 613 006

"இன்று புதியதாய்ப் பிறந்தோம்"

திரு அன்னம் பாலன் (மா.வே. பாலசுப்பிரமணியன்)
கடையநல்லூர்

புலவர் உதயை மு.வீரையன்,எம்.ஏ.,
சென்னை - 600 005

திரு செ. சத்யானந்தன்
சாத்தூர் - 626 203

திருமதி சுசீலா கோவிந்தராஜ், பி.எஸ்ஸி.,
காஜாமலை

**மாணவர் மலர் கவிதைப் போட்டி**

தெரிவு செய்யப்பெற்ற மரபுக் கவிதைகள் (மாணவர்கள்) விவரம்:

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்"**

**மு. அம்பிகா**
மணப்பாறை - 621 306

**மு. இளங்கோவன்**
திருச்சிராப்பள்ளி - 620 024

**தி. திருநாவுக்கரசு**
தஞ்சாவூர் - 613 005

**க. ஹேமந்தகுமார்**
சேலம் - 8

**மு. சுரேசு**
தஞ்சாவூர்

**மாணவர் மலர் கவிதைப் போட்டி**

மாணவர் மலரில் வெளியிடத் தெரிவு செய்யப்பெற்ற புதுக் கவிதைகள் (மாணவர்கள்) விவரம்:

**"இனி ஒரு விதி செய்வோம்"**

**என்.கே. குமரேசன் ராஜா**
கடலூர்

**இரா. சுப்பிரமணி, பி.ஏ.,**
சேலம் - 7

**ச. குமரேசன்**
ஒரத்தநாடு

**ச. புகழேந்தி**
மதுரை - 625 001

**செல்வி வீ. விஜயலட்சுமி**
ஒரத்தநாடு

**ரெ. சுப்பிரமணியன்**
பூண்டி

**எம். முருககுமார்**
பொள்ளாச்சி

**செல்வி த. இரமணி தேவி,**
மதுரை - 625 021

**செல்வி பி. பிரதிமா**
சென்னை - 7

**சி. மருதுபாண்டியன்**
அருப்புக்கோட்டை

**மாணவர் மலர் ஓவியப் போட்டி**

மாணவர் மலரில் வெளியிடத் தெரிவு செய்யப்பெற்ற பள்ளி மாணவர்களின் ஓவியங்கள் விவரம்:

**சி.எஸ். இரவிக்குமார்**
புதுக்கோட்டை - 622 001

**எஸ். லாவண்யா**
கும்பகோணம்

**எஸ். பாலாஜி**
மதுரை - 1

**ஜெ. ஜோசப் செல்வராஜா**
கோவில்பட்டி

**சி. ஹெலினா சாந்தகுமாரி**
தஞ்சாவூர்

**கே. உமாதேவி**
கேளூர்

**ஆர். இராதா**
தஞ்சாவூர்

**எம். இராமேஸ்வரன்**
மதகடிப்பட்டு

**ஆர். மோகன்**
பவானி - 638 302

**மீ. சண்முக கணபதி**
வில்லுக்குறி

**அனில் லயோனல்**
நசரத்

**மா. வினோத்**
ஏழாயிரம்பண்ணை

**மாணவர் மலர் ஓவியப் போட்டி**

மாணவர் மலரில் வெளியிடத் தெரிவு செய்யப்பெற்ற கல்லூரி மாணவர்களின் ஓவியங்கள் விவரம்:

**ஜெ. ஞானகணபதி**
புதுச்சேரி

**எம். ஆரோக்கியராஜ்**
கும்பகோணம்

**E. சக்திவேல்**
புதுச்சேரி

**விஜயபரமேஸ்வரன்**
மணப்பாறை

**வெ. செந்தில்குமார்**
மதுரை - 9

**வி. வெங்கட்ராமன்**
சிவகங்கை

**செ. சரவணானந்தன்**
பொள்ளாச்சி

**மரு. எம். லதாராணி**
பாளையங்கோட்டை

**சு. உதயகுமார்**
கோவை

**எஸ். அறிவழகன்**
கும்பகோணம்

**ச. செங்கோட்டுவேல்**
திருச்செங்கோடு

**பி. ஸ்ரீவெங்கடேஸ்வரன்**
பாண்டிச்சேரி

கல்விச் செல்வத்தை அளிப்பதில் ஆர்வம் காட்டும் ஆசிரியர்களுக்குச் சமுதாயத்தில் நல்ல மதிப்புக்கிடைக்கச் செய்ய வேண்டும். ஏனென்றால் அவர்கள்தான் அறிவுக் கண்களைத் திறந்துவைக்கிறார்கள்.

மலரிடம் மங்கையர்க்கும் தேனிடம் வண்டுகளுக்கும் ஏற்படும் பிரேமை போல குழந்தைகளுக்குத் தாயிடம் பாசம் ஏற்படுகின்றது.



# தமிழ் இலக்கியங்களில் உலகச் சிந்தனைகள்

டாக்டர் இரா. செல்வக்கணபதி
முதல்வர்
தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரி
தருமபுரம், மயிலாடுதுறை

தமிழ் இலக்கியம் படைத்தளித்த பலரும் மனிதநேயம் மிக்கவர்கள். உயிர்க் குலத்தின் பால் அன்பு பூண்டவர்கள். பண்பாட்டுச் செல்வர்கள். குறுகிய எண்ணங்களுக்குள், தங்களைச் சிறைப்படுத்திக் கொள்ளாது, உலக வானில், சிறகடித்துப் பறந்தவர்கள், தொகுத்து உரைப்பதானால் அன்பு, நாண், ஒப்புரவு கண்ணோட்டம், வாய்மை என்ற ஐந்தும் ஒருங்கே நிறைந்த சான்றாண்மைச் செல்வர்கள். அவர்கள் தங்கள் படைப்பு களைத் தமிழ் மொழியில் படைத்தார்கள், ஆனால், தமிழ் பேசும் மக்களுக்காக மட்டும் படைத்தவர்கள் அல்லர்; உலகில் வாழும் மனிதகுலம் அனைத்திற்கும் ஒருசேரப் பயன்படும் கருத்துக்களை எடுத்துரைப்ப திலேயே அவர்கள் நெஞ்சம் தோய்ந்திருந்தது. தான், தன் பெண்டு, தன் பிள்ளை, தன் மொழி, தன் நாடு என்ற சிற்றெல்லைகள் தகர்க்கப்படும்போது, தாமே உலகச் சிந் தனைகள் அரும்பத் தொடங்குகின்றன. உலகச் சிந்தனைகள் தமிழ் இலக்கியத்தில் ஒன்றல்ல இரண்டல்ல, ஓராயிரத்திற்கு மேலும் உண்டு. அவற்றை விரிப்பின் பெருகும் தொகுப்பின் எஞ்சும்.

மொழி, இனம், நாடு என்ற பெயரில் உலகம் சிதறுண்டு விடுமோ என்ற அச்சத்தின் விளிம் பில் மனித குலம் நிற்கும் காலம் இது. மொழி வழி ஒருமை, தேசிய ஒருமை, உலக ஒருமை என்ற சிந்தனைகளின் இன்றியமையாமை உணரப்படும் நேரம் இது! இத்தகு நேரத்தில் தமிழ் இலக்கியங்களை முன்னிறுத்தி உலகச் சிந்தனைகளைத் திரட்டி, மனித குலத்திற்கு வழங்குவது பெரிதும் பயன்பாடு உடையது. இன்றுபோல் விஞ்ஞானம், தொழில் நுட்பம், அறிவியல் அறிவு நம் முன்னோர்களிடம் நிறைவாக இல்லாதிருக்கலாம். ஆனால், மனிதநேயம் மானுடப் பண்பு. மனித குல ஒருமையில் நம்மினும் அவர்கள் மேம்பட்டி ருந்தனர் என்பது மறக்க இயலாதது.

அறிவாவது யாது? இந்த வினாவிற்கு விடை தருவோர் பலர் கல்வியோடு, அறிவை இணைத்தே விடை தருவர். அறிவு, கல்வியால் உருவாக்கப்படுவது அன்று, கல்வி, அறிவைக் கூர் தீட்டி ஒளிவிடச் செய்யும் ஒரு கருவி. அறிவு என்பது, உயிர்க்குணம் எல்லா உயிர்களிடத்திலும் பிறப்பு வகையால் தாமே அமைந்து கிடப்பது. இந்த விளக்கங்களை நினைவில் வைத்துக்கொண்டு உலகப் பொதுமறை படைத்த தமிழ்ச் சான்றோர், திருவள்ளுவரிடம் செல்கிறோம். வினவு கின்றோம், அறிவாவது யாது?

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், உலகளாவிய தமிழுக்குத் தஞ்சையில் எட்டாவது உலகத் தமிழ் மாநாடு எடுத்துச் சிறப்பிக்கும் வேளையில், தமிழ் இலக்கியங்களில் காணலாகும் உலகச் சிந்தனைகளைத் தொகுத்து இக்கட்டுரையை ஆசிரியர் வழங்குகின்றார்.**

அறிவு என்பது, அற்றங்காக்கும் கருவி, மனத்தை நன்றின் பால் உய்ப்பது. மெய்ப் பொருள் காணத் துணை நிற்பது. நுண் பொருள் காண உதவவல்லது. நான்கு விளக்கம் கூறிய வள்ளுவர், ஐந்தாவதாக அறிவிற்கு நாம் சற்றும் எதிர்பாராத உலகில் எந்த ஒரு கவிஞரும் சிந்திக்காத புதிய விளக்கம் ஒன்றைத் தருகிறார்.



"உலகில் தழீ இயது ஒட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு"

ஒட்பம் என்ற சொல் அறிவைக் குறிப்பது. எது அறிவு? 'உலகத்தை எல்லாம் நட்பாக்கிக் கொள்ளுவது அறிவு' 'ஊரோடு ஒத்துவாழ்; 'ஊரோடு பகைக்கின் வேரொடும் கெடும்' என்பன தமிழர் வழங்கும் பழமொழி. உறவொடு ஒத்துப்போதல், ஊரோடு ஒத்துவாழ்தல், நாட்டொடு நட்புச் செய்தல் என்ற எல்லைகளைத் தாண்டி உலகத்தை எல்லாம் நட்பாக்கிக் கொள்ளுதல் அறிவு என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. உண்மை தான், நமக்குச் சந்திரமண்டிலத்தில் குடியேறும் விஞ்ஞான அறிவு உண்டு. ஆனால், அடுத்த வீட்டுக்காரன் நெஞ்சில் இடம் பிடிக்கும் பண்பாட்டு அறிவு உண்டா? இல்லையே! மனித குலத்தை நேசிக்கத் தெரியாத அறிவு அறிவே அல்ல. என்ன இப்படிக் கூறுகிறீர்கள்? நான் எத்தனை ஆண்டு படித்திருக்கிறேன்! எவ்வளவு பட்டம் பெற்றிருக்கிறேன்! எத்தனை நூல்கள் எழுதியிருக்கிறேன்! எனக்கா அறிவு இல்லை என்ற கோபம் நமக்கு வருகிறது! வள்ளுவப் பெருந்தகை மேலும் ஆத்திரம் ஊட்டுகின்றார்.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும்
கல்லார் அறிவிலா தார்".

எவ்வளவு அழுத்தமான சிந்தனை? உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லார் பல கற்றும் அறிவிலாதார் என்கிறார். இது வள்ளுவர் பெரிதாகப் போற்றும் ஒழுக்கத்தின் இலக்கணம் கூறும் திருக்குறள். உலகத்தோடு பொருந்த ஒழுகுதலைக் கல்லார் பல நூல்களையும் கற்றாராயிலும் அறிவிலா தவரே என்கின்றது குறள்!

'தமிழ் இலக்கியத்தில் உலகச் சிந்தனை' என்பதை உலகம் பற்றிய பொதுச் சிந்தனை என்றும், உலகத்தார்க்கெல்லாம் பொது வாகிய சிறப்புச் சிந்தனை என்றும் பகுத்து அறியலாம். 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல் உலகம்' எனத் தொல்காப்பியப் பாயிரம் தமிழ் வழங்கும் நிலப்பகுதிக்கு எல்லை வரையறுக்கிறது. தொல்காப்பியர் காலம் முதல் இன்று வரை தமிழ் இலக்கிய வாதிகளுக்குத் தமிழகம், பாரதம், உலகம் என்ற பாகுபாடு நன்கு தெரிந்தே வந்திருக்கிறது.

"திங்களைப் போற்றுதும் திங்களைப்
போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண்
குடைபோன்றுஇவ்
வங்கண் உலகளித்த லான்"

எனத் தமிழகம், பாரதம் இவற்றை உள்ளடக்கிய உலகத்தை இளங்கோவடிகள் குறியிட்டுக் காட்டிப் போற்றுகின்றார்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என வள்ளுவர் உலகுக்கு முதல்வன் ஒருவன் உளன் என பிரமாணப்படுத்துகின்றார்.

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற் கண்டாங்கு"

எனத் திருமுருகாற்றுப் படையைத் தொடங்கும் நக்கீரர் உலகத்தை வலமாக ஞாயிறு சுற்றி வருதல் போல் உலகத்தை அடையாளம் காட்டுகிறார்.

"உலகம் யாவையும் தாமுள வாக்கலும்"

என்று திருமாலைக் காப்பிய நாயகனாக முன்னிருத்தும் கம்பர் படைத்தலும், காத்தலும், அழித்தலும் ஆகிய முத்தொழில் விளையாட்டாகச் செய்பவன் எவனோ அவன் தலைவன் என நாம் வாழும் நிலவுலகை இனங்காட்டிப் பேசுகின்றார்.

தமிழ் மக்கள் போற்றி வழிபடும் நடராஜப் பெருமானைத் தெய்வச் சேக்கிழார், பெரிய புராணக் கடவுள் வாழ்த்தில்,

"உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்"

எனப்பேசி உலகத்து வாழ்வரால் உணரவோ ஓதவோ மாட்டாத பெரும் பொருள் சிவன் எனப் பெருமிதம் கொள்ளுவார்.

நாம் வாழும் இம்மண்ணுலகம் அல்லாத வேறு உலகங்கள் பற்றியும் தமிழ் இலக்கியச் சான்றோர்களுக்குத் தெளிவான கருத்து உண்டு.

"எல்லா உலகமும் ஆனான் கண்டாய்"

என உலகம் பல என்கிறார் நாவுக்கரசர். மேலே பல படிகடந்து மாணிக்கவாசகர் தம் திருவாசகத் திருவண்டப் பகுதியில்,

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பரும் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்றெழில் பகரின்
நூற்றொருகோடியின் மேற்பட விரிந்தன"

என வானவெளியில் நிலைபெற்றிருக்கும் பல்வேறு உலகங்களையும் அவற்றின் பரப்புக் களையும், சைவ ஆகமநெறி நின்று பேசி வியப்பூட்டுகின்றார்.

வள்ளலார், சித்தர்கள் முதலியோர் உலகம் பற்றித் தரும் செய்திகள் மிகப்பல. இவை மேலெழுந்த வாரியான ஒரு மதிப்பீடே அன்றி முழுமை உடையது அன்று, இதனை ஓரளவில் நிறைவித்துக் கொண்டு தமிழ் இலக்கிய வாதிகளின் உலகளாவிய மனித குல நலச் சிந்தனைகளில் நாம் கண்ணோட்டம் செலுத்த லாம். இவை பெரிதும் பயன்பாடு உடையன.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்ற மகாகவி பாரதியின் மதிப்பீடு போற்றத்தக்கது. நரிவெரூஉத் தலையார் என்ற புறநானூற்றுக் கவிஞர் திருவள்ளுவ மாலையில்,

"இன்பம் பொருள் அறம் வீடு என்னும்
இந்நான்கும்
முன்பு அறியச்சொன்ன முதுமொழிநூல்-
மன்பதைகட்கு
உள்ள அரிதென்று அவை வள்ளுவர்
உலகம்
கொள்ள மொழிந்தார் குறள்"

என வள்ளுவர் உலகம் கொள்ள குறள் மொழிந்த உண்மையைப் பறைசாற்றுகின்றார்.

"வள்ளுவன் செய்திருக்குறளை மருவறநன்
குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனு ஆதி ஒரு குலத்திற்கு
ஒருநீதி"

நூலாசிரியர்கள் பலர், ஒரு குலத்திற்கு ஒரு நீதி சொன்னார்கள். ஒரு மொழிக்கு ஒரு இயல்பு கற்பித்தார்கள்; ஆனால், வள்ளு வரோ மனித குலம் அனைத்திற்கும் ஒரே நீதி உரைத்தார் என மகுடம் சூட்டுகின்றார் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை.

திருக்குறள் தமிழில் எழுதப்பட்டது. தமிழ ருக்காக மட்டுமா அது எழுதப்பட்டது இல் லையே! தமிழர் மொழி, நாடு, ஊர், அரசு, எல்லை, ஏன் தமிழ் என்ற சொற்கூட வள்ளுவத்தில் இல்லை, உலக மக்களுக்காக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே சிந்தித்த ஓர் பேரறிஞரின் சிந்தனைத் தொகுப் பல்லவா திருக்குறள்? நாம் பெருமிதம் கொள்ளலாம்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"

எவ்வளவு அரிய சிந்தனை, எக்குடிப் பிறப்பினும் யாவரே ஆயினும் அவர்தம் முன் பிறப்பால் வேறுபாடு ஏதும் இல்லை என்று கூறும் துணிவு வள்ளுவருக்கு இருந்திருப்பது கண்டுவியக்கிறோம். அவர் பாடிய காலத் திலேயே நடைமுறைச் சமுதாயத்தில் சாதி, வருணம், இனம் என்ற பேதம் நிலவி இருந் ததைச் சங்க நூல்கள் விளக்குகின்றன. வள்ளுவர் தம் நிகழ்காலச் சமூகத்தோடு ஒத்துப்போகாது, எதிர்நீச்சல் இட்டு உலக நலம் பேண உரிமை முழக்கம் இடுகிறார்.

இல்லற வாழ்வின் நிறைபயன் புகழ், மனிதன் பிறப்பான், இறப்பான், இறவாது உலகில் நிலைபெறுவது எது? புகழ் மட்டுமே என்கிறார் வள்ளுவர். முல்லைக்குத் தேர் ஈந்த பாரி, மயிலுக்குப் போர்வை அளித்த பேகன், கல்லணை கட்டிய கரிகாலன், தஞ்சைப் பெரியகோவில் கட்டிய இராசராசன் ஆகி யோர் இன்று இல்லை. ஆனால், அவர்கள் புகழில் அழியாது வாழ்கிறார்கள். இதனை,

"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில்"


எனப் பதிவு செய்கிறார் வள்ளுவர், உலகுக்கு எல்லாம் ஒத்த அரிய சிந்தனை இது. இதனையே புறநானூறு.

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே"

என விரித்துரைக்கிறது.

கடைச் சங்க இலக்கியங்களைச் சான்றோர் செய்யுள் என்றும், புலவர்களைச் சங்கச் சான்றோர் என்றும் பிற்கால உரைகாரர்கள் போற்றி நின்றனர். சங்க நூல்களுள் ஒன்றாகிய புறநானூறு வியப்பூட்டும் அறப் பாட்டை இட்டுக் காட்டுவது உலகளாவிய உன்னதச் சிந்தனைகள் அங்கே ஏராளம் உண்டு. தாமும் வாழ்ந்து மற்றவர்களையும் இவ்வாறு வாழ்க என வற்புறுத்தி வழி காட்டிய சான்றோர்கள் சங்கப் புலவர்கள். புறநானூறு கூறும் உலகச் சிந்தனைகள் தமிழ் மக்களின் நாகரிக வரலாற்றிற்குப் பொன் வண்ணம் பூசுவன, சிலவற்றைப் பார்க்கலாம்.

குடபுலவியனார் உலகியல் அறிந்த பெருஞ் சான்றோர். பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு





அறிவுரை கூற வந்தவர் உலக மன்னவர்களுக் கெல்லாம் பொதுவாய் கடமைப் பண்புகளை அழுத்தம் திருத்தமாகப் பேசுகின்றார். நீர் இல்லாவிடின் உடல்வாடிவிடும். உயிர்க்குலத் திற்கு உணவு தருவோன் உயிர் தருவோன் ஆகின்றான். உணவு எப்படி வரும்? நிலமும் நீரும் சேர்ந்தால் தானே வரும்? எனவே, எவன் ஒருவன் நிலத்தையும் நீரையும் ஒன்று சேர்க்கிறானோ அவனே உலகில் உடலையும் உயிரையும் படைத்தவன் ஆகிறான். ஆதலின் குழிந்து கிடக்கும் நிலப்பரப்பில் எல்லாம் தண்ணீரை நிரப்ப உடனே ஏற்பாடு செய் என்கிறார் கவிஞர்.

"நீர் இன்றி அமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே
நிலன்நெளி மருங்கில் நீர்நிலை பெருக
தட்டோர் அம்ம இவண் தட்டோரே
தள்ளா தார் இவண் தள்ளா தோரே"

அணைக்கட்டுகளும், ஏரிகளும், குளங்களும், பிற நீர் நிலைகளுமே உயிர் வாழ்க்கையின் ஆதாரம் என்ற உயர் சிந்தனை உலகளாவிய பொது நோக்கில் மலர்ந்து நம் நெஞ்சில் நிறைகிறது.

கணியன் பூங்குன்றனாரின் சிந்தனைகளை அறியாத தமிழர் இலர். தமிழ் இலக்கிய உலகச் சிந்தனைத் தடத்தில் அழிக்கவியலாத ஒரு கல் எழுத்து இது.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

உலகில் எல்லா ஊரும் எமதே, உலகவர் அனைவரும் என் உறவினரே! என்ற சிந்தனை உன்னதமானது! உலகவர் அனைவரும் நெஞ்சில் பதித்து வைத்துப் போற்ற வேண்டிய அருமைப்பாடு உடைய வரி இது.

"தீதும் நன்றும் பிறர்தர வாரா"

என்ற தெளிவு பட்டறிவால் செழிப்பது.

"பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே"

நடுநிலை நின்று வாழ்வை உற்று நோக்கித் தெளிந்த சான்றோர்களின் உன்னத மன வெளிப்பாடு இங்கே பதிவாகியுள்ளது. விதிக் கோட்பாட்டை முன்னிறுத்திப் பேசப்பட்ட அரிய பாடல் வரிகள் இவை என்றாலும், இத் தகு தெளிவு அறநெஞ்சத்தார்க்கு அன்றி வாராது என்பதைக் கவிதை உறுதிபடக் கூறுகிறது. கணியன் பூங்குன்றன் உலகத்தார் நெஞ்சில் எல்லாம் சிம்மாசனம் போட்டு அமர்கின்றார். அவரை உருவாக்கிய தமிழ்நாடு உலகவர்முன் தலை நிமிர்கிறது. இம்மண்ணில் பிறந்த நாமும் இப்பெருமிதத்தில் பங்கேற்று மகிழ்கிறோம்.

"நல்லது செய்தல் ஆற்றி ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்"

என்ற நரிவெரூஉத் தலையாரின் உயரிய சிந்தனையும்,

"ஈயென இரத்தல் இழிந்தன்று அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று
கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று
அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும்
உயர்ந்தன்று"

என்ற கழைதின் யானையாரின் அற்புதச் சிந்தனையும், இவை போல்வன பிறவும் மனித குலத்திற்கெல்லாம் புறநானூறு வழங்கிய அறக்கொடைகளாக அமைகின்றன.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"

என்ற திருமூலர் சிந்தனை சமய உலகம் தந்த அரிய கொடைகளுள் ஒன்று. சைவ வைணவப் பேரிலக்கியம் படைத்த அருளாளர்கள் தத்தம் வழிபடு தெய்வத்தை முன்னிறுத்தி வாழ்த்தினர். ஆயினும் அங்கேயும் உலகச் சிந்தனைகள் பல உண்டு.

அறம்வெல்லும் பாவம்தோற்கும் என்ற சீரிய கருத்தைச் சொல்வதற்காகவே இராமகாதை பாடினார் கம்பர் என்பது அறிஞர் கருத்து. இராமன் அவதரித்த கோசல நாட்டை வருணிக்கும் கம்பர், உலகில் நாடுகள் எவ்வாறு சிறந்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தம் கவிதை ஒன்றில் பதிவு செய்கிறார். கோசலம் எவ்வாறு இருந்தது என்பதை நாம் அறியோம். கம்பரும் முற்றாக அறிந்திருக்க வாய்ப்பு இல்லை. கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் கம்பர் தாம் காண விரும்பிய ஒரு பெருமிதம் மிக்க நாட்டை கோசலத்தின் மீது ஏற்றிப் புனைகின்றார். உலகில் மக்கள் வாழும் எந்த ஒரு நாட்டிலும் மக்களின்பால் வறுமை இருத்தல் கூடாது. உடல் நொய்மை இருத்தல் கூடாது. பொய்மை இருத்தல் கூடாது. அறியாமை இருத்தல் கூடாது என்று கவிதை

நெஞ்சம் ஆசைப்படுகிறது. இந்த அவலங்கள் இங்கே இல்லை என்று கோசலத்தைப் படைக்கின்றார்.

“வண்மை இல்லை ஓர் வறுமை
இன்மையால்
திண்மை இல்லை நேர் செருநர்
இன்மையால்
உண்மை இல்லை பொய்
உரையிலாமையால்
வெண்மை இல்லை பல் கேள்வி மேவலால்”

இத்தகு நாடு உருவாக்க வேண்டும் உலகம் மகிழ்ந்திருக்க வேண்டும் என்றெல்லாம் கவிஞன் கண்ட கனவு உலகளாவிய உயர் சிந்தனைகளில் ஒன்றாகிறது.

கம்பரைத் தொடர்ந்து உலகளாவிய சிந்தனை கொண்ட கவிஞர் மரபு பெரிதும் வளரலாயிற்று. பின் வந்தோரில் மனித நேயத்தையும், உயிர் இரக்கத்தையும் முன்னிருத்தி உலகளாவிய ஒருமைப்பாடு காண விழைந்தவர் வடலூர் இராமலிங்க அடிகளார். சமயவாதியாகத் தொடங்கி சமுதாய ஒருமைக்காகச் சிந்தித்த பரிணாம வளர்ச்சியை அவர் கவிதைகளில் காணலாம். அவர் அறிவுறுத்திய சமரச சுத்த சன்மார்க்கம் உலகளாவிய மனிதநேயத்தை மையமாகக் கொண்டது.

“பன்னெறிச் சமயங்கள் மதங்கள்
என்றிடுமோர்
பவநெறி இதுவரை பரவியது இதனால்
செந்நெறி அறிந்திலர் இறந்திறந்து உலகோர்
செறியிருள் அடைந்தனர். ஆதலின் இனி நீ
புன்னெறி தவிர்த்து ஒருபொது
நெறியெனும்வான்
புத்தமுது அருள்கின்ற சுத்த சன்மார்க்கத்
தன்னெறி செலுத்துக”

என்று இறைவன் தமக்கு ஆணையிட்டதாக அவரே குறிக்கின்றார். உயிர்க்குலம் அனைத்தும் ஒன்று. இறைவன் ஒருவனே! அவன் ஒளி வடிவானவன். அவன் இயல்பு கருணை, புலால் மறுத்து உயிர்க்கொலை தவிர்த்து, ஆண் பெண் பேதமின்றி வாழ முனைவோர் சன்மார்க்கிகள். இவர்களுக்கு மதம் சாதி வருணம் ஏதும் இல்லை என்பன அவர் அருளிய உலக ஒருமைச் சிந்தனைகளின் சாரமாகக் கொள்ளத் தக்கன, என வள்ளலாரே தம் தமிழ் இலக்கியத்தில் உலகச் சிந்தனைகள் குறித்த ஆய்வில் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைத் தடத்தில் புரட்சியை விதைத்து பெரும்மாற்றத்தைச் செய்த அமரகவி பாரதியாரைப் புறக்கணித்தல் இயலாது. உலகம் பற்றிய பல்வேறு கருத்துக்கள் நன்கு அறியப்பட்ட காலம் அவருடையது. நாடு, மொழி, இனம் என்ற ஏற்றத் தாழ்வுகள் எல்லாம் அவர் காலத்தில் மனிதகுலத்தை ஆட்டிப்படைத்தன. உளம் வெதும்பிய பாரதியார் உலகம் பற்றி விரிவான சிந்தனைகள் பலவற்றைத் தம் கவிதைகளில் குறிப்பித்தார்.

“மானுடர் உழாவிடினும் வித்துநடாவிடினும்
வரம்பு கட்டாவிடினும் அன்றிநீர்
பாய்ச்சாவிடினும்
வானுலகு நீர்தருமேல் மண்மீது மரங்கள்
வகைவகையா நெற்கள் புற்கள்
மலிந்திருக்குமன்றே”.

“யான் எதற்கும் அஞ்சுகிலேன் மானுடரே
நீவிர்
என்மதத்தைக் கைக்கொண்மின்பாடுபடல்
வேண்டா!
ஊன்உடலை வருத்தாதீர் உணவியற்கை
கொடுக்கும்
உங்களுக்குத் தொழிலிங்கே அன்பு செய்தல்
கண்டீர்!

ஆங்கில ஆதிக்கத்திற்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்திய பாரதி அவர் தம் ஆதிக்க உணர்வை வெறுத்தாரே அன்றி ஆங்கிலேயர்களை வெறுக்கவில்லை. பகைவனுக்கும் அருளும் பண்பில் ஒரு கவிதை அமைகிறது!

பாரதியாரை அடியொற்றிவந்தவராயினும் உலகச் சிந்தனைகளில் பாவேந்தர் பாரதிதாசன் வேறுபட்டுத் தனி முத்திரைகளைப் பதித்துள்ளார்.

பாவேந்தரின் உலகப் பண்பாடு பிரசித்தமானது. உலகம் உன்னுடையது என்ற அவர் கவிதை உணர்ச்சிமயமானது. உலகில் அஞ்சிக் கிடந்த கோழை மனிதர்களை ஆத்திரத்தோடு தட்டி எழுப்பி வீறுகொள்ள விடிவெள்ளி ஆகிறார்.

“மனிதரில் நீயுமோர் மனிதன் மண்ணன்று
இமைதிற! எழுது நன்றாய் எண்ணுவாய்
தோளை உயர்த்து! சுடர்முகம் தூக்கு
மீசையை முறுக்கி மேலே ஏற்று!
விழித்த விழியில் மேதினிக் கொளிசெய்
நகைப்பை முழக்கு நடத்து உலகத்தை!”



என்று வீழ்ந்து கிடந்த உலகவரை உலகம் நடத்த வருகவென அறைகூவல் விடுகிறார்! மேலும் கூறுவார்.

"உன்வீடு உனது பக்கத்து வீட்டின்
இடையில் வைத்த சுவரை இடித்து
வீதிகள் இடையில் திரையை விலக்கி
நாட்டொடு நாட்டை இணைத்து மேலே ஏறு
ஏறுவிடாமல் ஏறு மேல்மேல்"

ஏறி என்செய்வது என்று திகைத்து நிற்கும் உலகவர்களுக்கு அரிய காட்சிகளைக் காட்டுகின்றார்.

"ஏறி நின்று பாரடா எங்கும்
எங்கும் பாரடா இப்புவி மக்களை!
பாரடா உனது மானிடப் பரப்பை
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்!
என் குலம் என்றுனைத் தன்னிடம் ஒட்டிய
மக்கள் பெருங்கடல் பார்த்து
மகிழ்ச்சிகொள்!
அறிவை விரிவுசெய்! அகண்டமாக்கு!
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!
அணைத்துக் கொள்! உனைச் சங்கமம் ஆக்கு!
மானிடச் சமுத்திரம் நானென்று கூவு!"

மனித குலத்திற்கு எத்துணைப் பெரிய நம்பிக்கை ஊட்டுகின்றார் பாவேந்தர். மேலும் அறிவுறுத்துகின்றார்.

"பிரிவிலை எங்கும் பேதம் இல்லை
உலகம் உண்ணஉன்! உடுத்த உடுப்பாய்
புகல்வேன் உடைமை மக்களுக்குப்பொது
புவியை நடத்துப் பொதுவில் நடத்து!

என்று உலகத்தை எல்லாம் ஒன்றாக நடத்தும் உன்னத நெறி பேசி ஒளியூட்டுகின்றார் பாரதிதாசனார். கூர்த்த அவர்தம் ஆவேசக் கவிதைகளில் முடங்கிக் கிடந்த மனித இனம் மேலே நிமிர்ந்து விஸ்வரூபம் கொள்கிறது!

பாவேந்தர் வழியில் வந்த கவிஞர் சுரதாவும், பட்டுக்கோட்டையாரும், கவியரசர் கண்ணதாசனும், உரைநடை இலக்கிய வாதிகளும் விரிவாகவே சிந்தித்தனர்.

உலகம் ஒன்றாக வேண்டும். உயிர்க்குல நேயம் வேண்டும். உலகளாவிய ஒருமை உருவாக வேண்டும் என்பதற்கு மேலாக மானுடக் குறிக்கோள் வேறு இருத்தல் இயலாது. விலங்கும், பறவைகளும் பெறாத வளர்ச்சியையும் உயிர்ச்சியையும் மனித குலம் பெற்றிருப்பதற்கு அடிப்படையே கூடி வாழும் சமூகப் பண்பினால்தான். தமிழர்கள் தங்கள் நாகரிகத்தையும், பண்பாட்டையும் போற்றி நிற்பவர்கள். தங்கள் கலாச்சாரங்களில் அழுத்தமான பிடிப்புடையவர்கள். என்றாலும், பிறர் எவராயினும் அவர்கள் நாகரிகங்களுக்கும் மதிப்பளித்து வாழ்பவர்கள். வேற்றுமையில் ஒற்றுமை காணும் உயர் பண்பினர்.

தேசங்களாலும், இனங்களாலும், மொழியாலும் வேறுபட்டுக் கிடக்கும் உலகவர்களின் அடிப்படைப் பண்புகள் என்றும் மாறாதவை. அவற்றை இனங் கண்டு போற்றி மனிதகுல ஒருமைக்கு நெஞ்சார்ந்த நேசக்கரம் நீட்டிய தமிழ்க் கவிஞர்கள் நமது வணக்கத்துக்குரியவர்கள். இவை தமிழர் செய்த நற்பேற்றின் விளைவுகள்.

தமிழ்க் கவிதைத் தடத்தில் பூத்த உலகச் சிந்தனைகளும், உலகளாவிய மக்கட் சிந்தனைகளும் இங்கே தொகுத்துச் சுட்டப்பட்டன. தமிழ்க் கவிஞர்கள் குறுகிய எல்லைகளுக்கு உள்ளே தங்களைச் சிறைப்படுத்திக் கொண்டவர்கள் அல்லர். அவர்கள் மொழியையும், நாட்டையும் பெரிதும் நேசித்தனர். இந்த நேசம் இன்னொரு மொழியையோ, நாட்டையோ இகழ இடந்தரவில்லை! தங்கள் சீரிய சிந்தனைகளை உலகவர்க்காகச் சிந்தித்தனர். அவர்களை முன்னிலைப்படுத்திய உரைத்தனர். அன்பால் மனிதகுலம் ஒன்றுபட வேண்டும் என்பதே அவர்கள் பேராசை. இந்த ஆசை நிறைவேறும் நாள் தமிழ்க் கவிஞர்களின் உள்ளம் குளிரும் நாள்! ஒரு குலம் உருவாகுமா? பொறுத்திருந்து பார்ப்போம்!



**திருக்குறள் என்னும் சீரிய நூல் சமயம், காலம், சாதி, இடம் முதலிய வரையறையின்றி, எச்சமயத்தார்க்கும், எக்காலத்திற்கும், எச்சாதியினர்க்கும் எந்நாட்டினர்க்கும் பொதுவாய் உண்மைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் தனி நூலாகத் திகழுகின்றது.**

**–டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை**

டாக்டர் அம்பேத்கர்
நினைவு நாள்: டிசம்பர் - 6

# அண்ணல் அம்பேத்கர்



முருகப் பெருமான் வள்ளி தெய்வானையோடு உற்சவக் கோலம் பூண்டிருந்தார்.

பல்லக்கில் ஏற, பயபக்தியோடு வந்தார் குருக்கள்.

பல்லக்கின் அருகே விளக்கேந்தி நின்றிருந்தான் தாழ்த்தப்பட்ட வகுப்பினன் ஒருவன். அந்த இளைஞனின் துணி, காற்றில் அசைந்து குருக்களின்மேல் பட்டுவிட்டது.

அவ்வளவுதான்- எரிமலையானார் குருக்கள். "அடேய் அபிஷ்டு, என்னைத் தொட்டுத் தொலைச்சுட்டியேடா. இன்னொரு தடவையில்லே நான்போய் ஸ்நானம் பண்ணியாகனும்!" என்று கூறித் தன் தலையில் அடித்துக் கொண்டார். எரிச்சலோடு முகஞ்சுளித்து, எரித்து விடுவது போல அவனைப் பார்த்தார்.

பல்லக்கின்மேல் முருகக் கடவுளோடு நின்றிருந்த குறமகள் வள்ளி, அதைப் பார்த்துக் கலகலவென்று சிரித்தாள்! முருகனும் முறுவலித்தான்!

—புகழ்மிக்க எழுத்தாளர் ஒருவரின். கைவண்ணம் இது.

இப்படிக் கடவுளரே கைகொட்டிச் சிரிக்குமளவுக்கு, மனிதன் சாதிமத பேதங்களுக்கு ஆட்பட்டுவிட்டான். இந்த நிலை, மனித சமுதாயத்தையே பீடித்துள்ள பெரும் நோயல்லவா?

உயிருக்கோ உடம்புக்கோ எந்தச் சாதியும் கிடையவே கிடையாது. இந்தக் கருத்தை வலியுறுத்திப் பெருமை கொண்டவர்தான் டாக்டர் அம்பேத்கர்.

ராம்ஜி சக்பால் பீமாபாய் தம்பதிகளுக்குப் பொருட்செல்வத்தில் பஞ்சம் இருந்ததோ இல்லையோ, மக்கட்செல்வத்தில் பஞ்சமில்லை. ஏற்கெனவே பதின்மூன்று பிள்ளைகளின் பெற்றோராக இருந்த அவர்கள், 1891-ஆம் ஆண்டு ஏப்ரல் பதினான்காம் தேதி, பதினான்கவதாக ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத்தார்கள். பஞ்சபாண்டவர்களில் இரண்டாவது சகோதரனான பீமன் பெயர் வைக்கப் பட்டது, அக்குழந்தைக்கு.

அந்தக் குழந்தைதான் இந்திய அரசியல் சட்டத்தின் தந்தை என்று பிற்காலத்தில் அவனி போற்ற வளர்ந்த டாக்டர் அம்பேத்கர்.

மக்கட் செல்வம் நிறைந்த அக்குடும்பத்தில் ஏனோ அந்தச் செல்வம் அனைத்தும் அப்படியே நிலைத்திருக்கவில்லை. பலராமன், அனந்தராவ் ஆகிய ஆண் பிள்ளைகளும் மஞ்சுளா, துளசி ஆகிய பெண்களும், கடைசியாகப் பிறந்த நம் அம்பேத்கரும் மட்டுமே எஞ்சினார்கள். இந்த ஐவர் போக மற்றவர்களெல்லாம் பல்வேறு கால கட்டங்களில் இளமையிலேயே மாண்டு போனார்கள்.

அம்பேத்கர் இரண்டு வயது சிறுவனாக இருந்தபோது, அவருடைய தந்தை, ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். அரிச்சுவடி முதலான பாடங்களைத்

தம் இளைய மகனுக்குக் கற்பிப்பதே அவரது ஓய்வு காலப் பணியாயிற்று.

வேலையிலிருந்து ஓய்வு பெற்றதுமே தபோலி என்ற ஊருக்குக் குடும்பத்தோடு குடிபெயர்ந்தார் ராம்ஜி சக்பால். ஓய்வூதியத்தைக் கொண்டே அந்தப் பெரிய குடும்பத்தை நடத்துவது எளிதாக இல்லை. தன் வயதுக்கேற்றபடி ஏதேனும் ஒரு வேலை கிடைத்தால் செய்யலாம் என்று முடிவு செய்தார்; தேடினார்; கிடைத்தது.

சதாரா என்ற இடத்தில் இருந்த இராணுவக் குடியிருப்பில்தான் அவருக்கு ஒரு வேலை கிடைத்திருந்தது.

சிறுவனான அம்பேத்கருக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் மகாபாரதம், இராமாயணம் தொடர்பான கதைகளைச் சொல்லுவார் தந்தை; கபீர்தாசரின் பாடல்களைக் கணிவோடு கற்பிப்பார்.

தபோலியில் அவர்கள் குடும்பம் இருந்தது. ராம்ஜி சக்பாலோ சதாராவில் வேலை பார்த்து வந்தார். நாளடைவில் அவர் அங்கேயே தங்கும்படி ஆகி விட்டது.

அம்பேத்கரும், அனந்தராவும் எப்போதாவது தந்தையைப் பார்க்க சதாரா வந்துபோவது வழக்கம். முன்கூட்டியே தாம் வருவது பற்றி தந்தைக்குத் தகவல் தெரிவித்துவிடுவார்கள். புகைவண்டி நிலையத்திற்கு வந்து காத்திருந்து பிள்ளைகளை அழைத்துப் போவார், அவர்.

அப்படியொரு நாள் கடிதம் எழுதிவிட்டு, அவர்கள் தபோலியை விட்டுக் கிளம்பினார்கள். அவர்களுடைய கடிதம் சக்பாலுக்குக் குறித்த நாளுக்கு முன்கூட்டியே கிடைத்திராததால், சதாரா புகைவண்டி நிலையத்தில் அவர் வந்து காத்திருக்கவில்லை.

ரயிலை விட்டு இறங்கிய அம்பேத்கரும் அவருடைய சகோதரரும், அங்கே தமது தந்தையைக் காணாததால், செய்வதறியாது கலங்கிப் போய் நின்றார்கள்.

விஷயமறிந்த ரயில்வே ஊழியர் ஒருவர் வாடகைக்கு ஒரு வண்டியை அமர்த்தி, அவர்களைக் கிராமத்திற்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்தார்.

போகிற வழியில்தான் வண்டியோட்டிக்கு அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்தது. உடனே பதறிப் போய், வசைபாடியபடி வண்டியைவிட்டுக் கீழே குதித்

## அறுவைச் சிகிச்சைக்காக

## மாண்புமிகு முதல்வர் உதவி

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களிடம், தனது இருதய அறுவைச் சிகிச்சைக்காக நிதி உதவி வழங்க வேண்டும் என திரு என்.எஸ். வர்மா அவர்கள், தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளத்தின் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தியபோது கேட்டுக் கொண்டார்.

அவரது கோரிக்கையை விரைந்து பரிசீலனை செய்யவேண்டும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார். அதன்படி திரு என்.எஸ். வர்மா அவர்களின் இருதய அறுவைச் சிகிச்சைக்காக 15,000 ரூபாயை முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சென்னை, வடபழனியைச் சேர்ந்த திருமதி நளினி விஜயராகவன் என்பவர், தான் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்து கொண்டதாகவும், அந்த அறுவைச் சிகிச்சைக்காக அதிக அளவில் செலவு செய்துள்ளதாகவும் தமிழக முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி வழங்க வேண்டும் எனவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு மனு செய்து இருந்தார். அவரது மனுவைக் கனிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அவருக்கு 20,000 ரூபாயை முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கி ஆணை பிறப்பித்துள்ளார்.

தான் வண்டியோட்டி. திடீரென்று அந்த வண்டியைக் குடைசாய்த்து அவர்களைக் கீழே உருட்டிவிட்டான்.

அவனுடைய சாதிவெறி, அந்தச் சிறுவர்களைக் கதிகலங்கச் செய்துவிட்டது. இருந்தாலும் பாதிவழிக்குமேல் பயணம் போவதுதான் எப்படி? அவனுடைய கோபம் தீரும்வரை பொறுத்துக் கொண்டிருந்தார் ஆனந்தராவ். பிறகு மெலிதான குரலில், வண்டிக் கூலி- பேசியதைப்போல் இரண்டு பங்கு தருவதாகச் சொல்லி, தம்மை அழைத்துப் போகும்படி கெஞ்சினார். பணம் அதிகமாகக் கிடைக்கிறது என்றதும், மனம் மாறிவிட்டான் வண்டியோட்டி.

ஆனால், அவர்கள் இருவரையுமே வண்டி ஓட்டிப் போகும்படி சொல்லிவிட்டான். வண்டிக்குப் பின்னால் அவன் கடைசிவரை நடந்தே சென்றான்.

செல்லும் வழியில் தாகம் எடுத்தபோதெல்லாம் அவன் ஆங்காங்கே தண்ணீர் வாங்கிக் குடித்தான். நீண்டதூரப் பயணம் ஆகையால், ஆனந்தராவும், அம்பேத்கரும் தாகத்தால் தவித்தார்கள். அவர்கள் தாழ்த்தப்பட்ட சாதியினர் என்று கூறி, எவருமே தண்ணீர் கொடுக்க மறுத்துவிட்டார்கள். கடுமையான நா வறட்சியுடனேயே கடைசிவரை தாகத்தோடு ஊர் போய்ச் சேர்ந்தார்கள், அவர்கள்.

விஷயமறிந்த ராம்ஜி சக்பால், வேதனையால் துடித்துப் போனார். இருந்தாலும், வண்டியோட்டியையோ தாகத்திற்குத் தண்ணீர் தராதவர்களையோ கண்டிக்க, அவருக்குத் தைரியம் இல்லை.

ஆனாலும் அவர் ஒரு காரியம் செய்தார். கூடிய சீக்கிரத்தில் தன்னுடைய குடும்பத்தையே சதாராவுக்குக் கொண்டு வந்துவிட்டார். ஓய்வூதியத்தோடு, புதியதாகக் கிடைத்த வேலை மூலம் வந்த வருமானமுமாகச் சேர்ந்து, மகிழ்ச்சிகரமாகக் குடும்பம் நடத்தப் போதுமானதாக இருந்தது.

பெண் பிள்ளைகளான மஞ்சுளாவுக்கும் துளசிக்கும் திருமணம் முடிந்தது.

*1896*-இல், நமது அம்பேத்கருக்கு ஆறு வயதாகும்போது, அவருடைய அன்புத்தாயார் பீமாபாய் இறந்து போனார்.

1900-இல், சதாராவில் இருந்த தொடக்கப்பள்ளியில் சேர்க்கப்பட்டார் அம்பேத்கர். திருமணமாகிவிட்டபோதிலும் சகோதரிகள் இருவரும் கண்ணுங்கருத்துமாகத் தமது தம்பியைப் பார்த்துக் கொண்டார்கள். அத்தை மீராபாய் அரவணைப்பு வேறு.

இதெல்லாமாகச் சேர்ந்து, சிறுவன் அம்பேத்கரைச் சிறப்பாகக் கல்வி பயிலச் செய்தன. தொய்வின்றித் தொடக்கப் பள்ளிக் கல்வி முடிந்தது.


சதாராவில் இருந்த உயர்நிலைப் பள்ளியில் சேர்க்கப்பட்டார் அம்பேத்கர். சதாரா பள்ளிக்கூடம்தான், அவருக்கு அறிவுச்சுடர் கொளுத்தும் ஆரம்பக் கூடமாக இருந்தது.

‘சாதி மதங்களைப் பாரோம்’ என்ற கொள்கையின் முதல் வித்து அங்கேதான் அவர் பண்பட்ட மனதில் அழுத்தமாக ஊன்றப்பட்டது; அனைவரும் சமம் என்ற உணர்வுக்கு அஸ்தி வாரம் போடப்பட்ட இடமே அதுதான்.

அரும்புப் பருவத்தில், தொடக்கக் கல்வி பயின்ற காலத்திலேயே வகுப்பறையில் அவர் ஆசிரியராலும், மாணவர்களாலும் உதாசீனப்படுத்தப்பட்டதுண்டு. தீண்டத்தகாத வகுப்பைச் சேர்ந்தவர் என்று கூறி, வகுப்பறையில் அவரைத் தனியே ஒதுக்கி உட்கார வைத்திருந்தார்கள்- அதுவும் வெறுந்தரையில். வகுப்பறையில் இருந்த தண்ணீர்ப்பானையில் அவர் தண்ணீர் குடிக்கக் கூடாது; யாராவது தூர நின்று ஊற்றுவார்கள்; இவர் கையேந்திக் குடிப்பார். மற்ற பிள்ளைகளோடு சேர்ந்தாற்போல் உட்கார்ந்து சாப்பிடக் கூடாது; சக மாணவர்களோடு சேர்ந்து விளையாடக் கூடாது என்றெல்லாம் கட்டுப்பாடு இருந்தது.

அதே நிலைமைதான் சதாரா உயர்நிலைப் பள்ளியிலும் தொடர்ந்தது. மனிதருக்கு மனிதர் இப்படியொரு பேதம் கொண்டிருப்பது தேவை தானா என்ற கேள்வி அம்பேத்கரின் பிஞ்சு நெஞ்சைப் பிசைந்தது. ஆசிரியர்கள் அவர் நோட்டுக்கை வாங்கித் திருத்தக் கூட வெறுத்தார்கள் என்றால்- அவர் மனநிலை எப்படியிருந்திருக்கும்?

கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும்; உப்புக் கடலில் உயர்முத்தம் விளையும் என்பதுபோல, சாதி வெறி பிடித்தலைந்த உயர் வகுப்பாரிடையிலும் அத்தகைய மூர்க்க குணம் நீங்கிய சிலர் இருந்தது உண்டு; இருப்பதும்



**ஒருவன், தான் விரும்பும் நலன்கள் அனைத்தும் பிறருக்கும் உண்டாகச் செய்வதுதான் நாகரிகம். அதற்கேற்ற வகையில் நமது உழைப்புப் பயன்பட வேண்டும்.**

# கூட்டுறவே நாட்டுயர்வு

பரஸ்பர உதவிக்காக இணையும் கைகள் கூட்டுறவாகப் பரிமளிக்கின்றன. வலிமை அற்றோரை வலிமை உள்ளோர் சுரண்டும் போக்கிற்கு முற்றுப்புள்ளி வைக்க உதவுகிறது கூட்டுறவு இயக்கம்.

இந்தியக் கூட்டுறவு அமைப்பு, 3.53 இலட்சம் கூட்டுறவுச் சங்கங்களை உறுப்பினர்களாகக் கொண்டு உலகிலேயே மாபெரும் அமைப்பாகத் திகழ்கிறது. இவற்றின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 17.51 கோடி நடப்பு முதலீடோ ரூ.76,000 கோடி!

வேளாண் கடனுதவியில் இவற்றின் பங்கு குறிப்பிடத்தக்கது. 1960-61-இல், குறுகிய, மத்திய, நீண்ட கால வேளாண் கடனுதவித் தொகையாக கூட்டுறவு அமைப்புகள் வழங்கிய தொகை ரூ.21 கோடி. இது, 1992-93-இல் ரூ.6,533 கோடியாக உயர்ந்துள்ளது.

பல்வேறு நிலைகளிலும் அமைப்புகளின் மூலமும் இக்கடனுதவி வழங்கப்படுகிறது. இவ்வாறுள்ள அமைப்புகளில், துவக்க வேளாண் கடன் சங்கங்களின் எண்ணிக்கை 89,000 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் 353, மாநிலக் கூட்டுறவு வங்கிகள் 28 இவை குறுகிய கால கடன் வழங்கு அமைப்புகள், நீண்ட கால கடன் வழங்கு அமைப்பாக 717 துவக்க நிலவள வங்கிகளும், 19 மாநில நிலவள வங்கிகளும் செயல்படுகின்றன.

உண்டு. அப்படிப்பட்ட பிராமண ஆசிரியர் ஒருவர் அந்த உயர் நிலைப் பள்ளியில் இருந்தார். அவருடைய பெயர் அம்பேத்கர்.

நம்முடைய அம்பேத்கர், எவர் எப்படி நடத்திய போதிலும் அதைப்பற்றியெல்லாம் கவலைப் படாமல் படிப்பே குறியாக இருந் தார். அந்த வகுப்பிலேயே முதல் மாணவனாகவும் விளங்கினார்.

சதாரா பள்ளியில் அவர் சமஸ் கிருதம் படிக்க முடியாது என்று தடை விதிக்கப்பட்டது. அது தெய்வமொழி என்பதால் அப் படியாம். இதனால் பாரசீக மொழி படிக்கலானார் அம்பேத் கர். ஆனால் வெளியே தனி யாசிரியர் மூலம் சமஸ்கிருதம் படிக்கவும் அவர் தவறவில்லை.

இதனால் எல்லாம் ஆசிரியர் அம்பேத்கர், அவர்மேல் மிகுந்த அன்பு காட்டலானார். பாறை யில் ஈரம் கண்ட செடி போல அந்த அன்பு கண்டு இன்னும் ஊக்கத்தோடு படித்து வரலா னார் நம் அம்பேத்கர்.

ஒருநாள் காலை நேரம். அடை மழை பெய்து கொண்டிருந்தது. எப்படியும் பள்ளிக்கூடம் போயே ஆக வேண்டும் என்ற உறுதியோடு புறப்பட்டார் அம் பேத்கர். அந்தத் தெருவிலிருந்த இரண்டொரு சிறுவர்கள் இந்த மழையில் எப்படிப் போவது என்று நின்று விட்டனர். அவர் களிடம் பந்தயம் கட்டிவிட்டு, அந்த அடைமழையிலும்கூட பள்ளிக்கூடம் வந்து சேர்ந்தார் அம்பேத்கர்.

தெப்பலாக நனைந்தபடி பள்ளிக்கூடம் வந்து சேர்ந்த அவரைப் பார்த்ததும் மனம் நொந்து போனார் ஆசிரியர் அம்பேத்கர். பரிவோடு சிறுவன் அம்பேத்கரை அழைத்துத் தனது துண்டால் துவட்டி விட்டார். மாற்றுத் துணி கொடுத்து உடுத் திக் கொள்ளச் செய்தார். இது மட்டுமல்ல; தனக்காக எடுத்து வந்திருந்த சாப்பாட்டை அவருக் கும் தனக்குமாகப் பங்கிட்டுக் கொண்டு சாப்பிட்டார்.

அந்த ஒருநாள் மட்டுமல்ல; பெரும்பாலான நாட்களில் சிறுவன் அம்பேத்கருக்கு அந்த ஆசிரியரே உணவைப் பரிந்தூட் டுவது தொடர்ந்தது.

ஆசிரியர் அம்பேத்கர் அத் துடன் நின்றுவிடவில்லை. பீம ராவ் என்று இருந்த அவர் பெயரோடு தன் பெயரை யும் சேர்த்து 'பீமராவ் அம் பேத்கர்' என்றே மாற்றிவிட்டார். பள்ளிக்கூட வருகைப்பதிவேடு முதலிய ஆவணங்களிளெல்லாம் கூட அப்படியே பெயர் எழுதிப் பதிவு செய்தார்.

அன்றைய தினம் மாற்றம் செய்யப்பட்ட அம்பேத்கர் என்ற அந்தப் பெயருடையவரே பிற் காலத்தில் இந்தியாவின் சட்டச் சிற்பியாக வரலாற்றில் இடம் பெறப் போகிறார் என்பது அப் போதெல்லாம் அந்த ஆசிரிய ருக்கே தெரிந்திருக்காது!

ஆதிதிராவிடப் பெருமக்கள் தலைநிமிரச் செய்ய அவர் அயராது பட்ட பாட்டுக்குக் காரணம், இளமையில், மேற்கண்டவாறெல்லாம் அம்பேத்கர் சந்திக்க நேர்ந்த துன்ப துயரங்களே ஆகும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ!

**–பி.எல். இராசேந்திரன்**



# மூதறிஞர் இராஜாஜி

மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள்: டிசம்பர் - 10

தமிழ்நாட்டில் பிறந்து, அறிவாலும், ஆற்றலாலும், பண்பாலும், இந்திய நாட்டிற்கே பெருமையையும், உயர்வையும் தேடித் தந்த அரசியல் ஞானி மூதறிஞர் இராஜாஜி. 'தமிழ் நாட்டு அறிவு' என்று இவரைத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. பாராட்டினார். 'தனது மனச்சாட்சியின் காப்பாளர்' என்று அண்ணல் காந்தியடிகள் போற்றினார்.

அண்ணல் காந்தியடிகள் தம் சுக போகங்களையும், செல்வம் முதலிய சிறப்புகளையும் தியாகம் செய்து விட்டு, பொதுத் தொண்டிற்காகத் தம் வாழ்வையே அர்ப்பணித்ததைப் போலவே மூதறிஞர் இராஜாஜி அவர்களும் தம் செல்வச் செழிப்பையும் ஆடம்பர வாழ்வையும் உதறித் தள்ளி விட்டு, எளிய வாழ்க்கை வாழ்ந்ததோடு, தேச சேவைக்காகவே தம் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தார்.

சாதி வேற்றுமைகளையும், சமய வேற்றுமைகளையும் ஒழித்து, சமூகத்தில் ஒற்றுமையையும், சமத்துவத்தையும் நிலைநாட்ட அரும்பாடு பட்டார். கலப்புத் திருமணத்தை ஆதரித்தார். தீண்டாமை, மது ஆகிய இரு அரக்கர்களையும் எதிர்த்துப் போராடினார். 'கதர் இயக்கத்தின் தந்தை' என்று போற்றப்படும் வகையில், தமிழ்நாடு கதர் உற்பத்தியில் புகழ் பெற மூலகாரணராக இருந்தார்.

சத்தியம், அகிம்சை என்ற இரு கோட்பாடுகளின் அடிப்படையில் இந்திய சுதந்திரப்போரை நடத்திய மகாத்மா காந்தியின் நம்பிக்கைக்குரிய தளபதிகளுள் ஒருவராக நாட்டு விடுதலைப் போரில் ஈடுபட்டார். நடைமுறை வாழ்க்கையில் முழுக்க முழுக்க காந்தியவாதியாக இருந்தார். பண்டித ஜவகர்லால் நேரு, சர்தார் பட்டேல், பாபுராஜேந்திர பிரசாத் ஆகிய தலைவர்களோடு நெருக்கமான தொடர்பு வைத்திருந்ததோடு, ஆக்கப் பூர்வமான யோசனைகளை நல்கிச் சிறந்த வழிகாட்டியாக விளங்கினார்.

அவர் மனச்சாட்சிக்கு எது சரி, எது நியாயம் என்று தோன்றுகிறதோ, அதை யார் எதிர்த்தாலும் விட்டுக் கொடுக்க மாட்டார். சொந்த வாழ்வில் கண்ட எளிமையையும், சிக்கனத்தையும், பொதுவாழ்விலும் கடைப் பிடித்தார்.

எங்கிருந்தாலும், எத்தகைய உயர்பதவியில் இருந்தாலும், தமிழ் நாட்டின் உயர்வுக்காகவும், தமிழ் மக்களின் நன்மைக்காகவும், தமிழ் மொழியின் ஆக்கத்திற்காகவும் பாடுபடுவதை இராஜாஜி தம் கடமையாகக் கருதினார்.

அவர் ஆங்கிலத்தில் பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டால் ஒழிய, பெரும்பாலும் தமிழிலேயே பேசுவார். எத்தகைய பிரச்சினைகளையும் பொருத்தமான உதாரணங்களுடன் நகைச்சுவை ததும்பப் பேசித் தெளிவு படுத்துவார். மாற்றாரும் வியக்கும் வகையில் வாதிடுவார். அவரது சொற்பொழிவு அறிவுக்கு விருந்து.

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காக அவர் ஆற்றிய பணி உன்னதமானது. நன்னெறி காட்டிடும் தமிழ் நூல்களைத் தமிழ் அன்னைக்குச் சூட்டி இருக்கிறார். இலக்கியத்தைப் பற்றி அவர் கூறும்போது, 'ஒரு புத்தகம் அல்லது சஞ்சிகை திரும்பப் பெற முடியாத சில மணிநேரங்களை உன்னிடமிருந்து அபகரித்துக் கொண்டு விடுகிறது; பதிலுக்கு உனக்கு அது ஏதாவது நன்மை செய்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும்', என்பார். 'சக்கரவர்த்தி திருமகன்' 'வியாசர் விருந்து' போன்ற நீதிநெறி நூல்களைக் குழந்தைகளின் எதிர்கால நல்வாழ்வு

கருதியே எழுதினார். இவரது சிறு கதைகள், கட்டுரைகள் பெரும் பாலும், மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, கதர் அபிவிருத்தி ஆகிய நிர்மாணத் திட்டங்களை அடிப்படை யாகக் கொண்டே எழுதப்பட்டவை. திருக்குறளுக்கு இவர் ஆங்கிலத்தில் எழுதிய உரை சிறந்த தொண்டாகப் போற்றத்தக்கது.

நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடி, சமுதாயத் தொண்டில் ஈடுபட்டு, நகராட்சித் தலைவர், காங்கிரஸ் தலைவர், முதலமைச்சர், கவர்னர், மத்திய அரசு அமைச்சர், சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல்- இப்படிப் பல்வேறு பதவிகளில் நிர்வாகத் திறமையைக் காட்டி 94 ஆண்டுகள் வாழ்வாங்கு வாழ்ந்த அறிவுலக மேதை மூதறிஞர் இராஜாஜி நம் உள்ளங்களில் ஒளியாக என்றும் நிறைந்திருப்பார்.



ராஜாஜி பிறந்த இல்லம்
(தொரப்பள்ளி)

## நினைவில் இராஜாஜி

**1973** - டிசம்பர் 25 அன்று இராஜாஜி நினைவு 20 காசு அஞ்சல் தலையை மைய அரசு வெளியிட்டுச் சிறப்பித்தது.

**1975**- சென்னை கிண்டி படேல் சாலையில் காந்தி மண்டபம் அருகில் இராஜாஜி நினைவாலயம் தமிழக அரசால் கட்டப்பட்டு, 5.5.1975 அன்று திறக்கப்பட்டது. இராஜாஜி வாழ்க்கை நிகழ்ச்சிகள் தொடர் பான படங்களும், இராஜாஜி பற்றிய நூல்களும் நினை வாலயத்தில் வைக்கப்பட்டுள்ளன. அண்மையில் நூலகக் கட்டிடமும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

★ பள்ளிக்கூடங்கள் தேசத்தில் எத்தனை இருந்தாலும், பண்பாட்டுக்குப் பள்ளிக்கூடம் வீடேயாகும்.

★ நம்முடைய தேகமும், உள்ளமும் ஆண்டவனுடைய கோயில். அதைச் சுத்தமாக வைத்துக் காப்பது நம் கடமை.

★ எவ்வளவு கல்வியும் செல்வமும் இருந்தாலும், அடக்கம் இல்லாவிடில் பண்பாடென்பது இல்லை.

—மூதறிஞர் இராஜாஜி

## இராஜாஜி நினைவு இல்லம்

**1978**-தர்மபுரி மாவட்டம், தொரப்பள்ளியில் இராஜாஜி பிறந்த வீட்டை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் அரசுடைமையாக்கி, 10-12-1978 அன்று நினைவு இல்லமாக மாற்றினார். இராஜாஜி வாழ்க்கை வரலாற்றை விளக்கும் புகைப் படங்கள் அங்கு நிரந்தரமாக வைக்கப்பட்டுள்ளன.

அதே நாளில் இராஜாஜி நினைவு 25 காசு அஞ்சல் தலையையும் மைய அரசு வெளியிட்டுச் சிறப் பித்தது.



சென்னை உயர்நீதிமன்றத்துக் கருகில் இராஜாஜி சிலை 24.12.78 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வடக்குக் கடற்கரைச் சாலைக்கு இராஜாஜி சாலை என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவை மண்ட பத்தில் இராஜாஜி முழு உருவப்படம் அணி செய்கிறது.

# முயற்சி இருந்தால் முன்னேறலாம்!

அந்த மரத்தடியில் தையற்காரர் ஒருவர் துணி தைத்துக் கொண்டிருந்தார்.

பக்கத்துக் குடியிருப்பில் உள்ளவர்கள், கிழிந்த துணிகளைக் கொண்டுவந்து அவரிடம் தைக்கக் கொடுப்பார்கள். சில சமயங்களில் புதுத்துணிகளையும் தருவார்கள்.

தையற்காரருக்கு ஓரளவு வருமானம் வந்தது, என்றாலும் அது அவருக்குப் போதவில்லை. என்ன செய்வதென்று யோசித்தார். அவர் வீட்டுப் பக்கத்தில், மண்பாண்டம் செய்பவர்கள் இருந்தார்கள். அவர்களை அவருக்கு நன்றாகத் தெரியும். அவர்களில் ஒருவர், தையற்காரரிடம், "நீ தான் கஷ்டப்படுகிறாயே, சில மண்பாண்டங்களையும் அந்த மரத்தடியில் வைத்து விற்கலாமே!" என்று யோசனை கூறினார். தையற்காரருக்கு அது சரி என்று பட்டது.

ஒரு நாள் அந்த மரத்தடியில் சட்டி, பானை, பூந்தொட்டிகள் என்று மண்பாண்டங்கள் சில காணப்பட்டன.

ஒரு பக்கம் தையல் வேலை நடந்து கொண்டிருந்தது. ஒரு பக்கம் மண்பாண்டங்கள் விற்பனையாயின. இப்போது தையற்காரருக்கு நல்ல வருமானம் கிடைத்தது. அதுவும் மண்பாண்டங்கள் மூலமாகவே அதிக வருமானம் கிடைத்தது.

தையற்காரருக்கு ஒரு யோசனை வந்தது. 'தையல் வேலையை விட்டுவிட்டு மண்பாண்டங்களையே விற்பனை செய்தால் என்ன?' என்பதே அது.

உடனே தையற்காரர், தன்னுடைய தையல் இயந்திரத்தை விற்று, நிறைய மண்பாண்டங்களை வாங்கினார். அவற்றை மரத்தடியிலே கொண்டு வந்து குவித்தார். போவோர் வருவோர் அவற்றை வாங்கிச் சென்றனர். வியாபாரம் பெருகியது. என்றாலும் தையற்காரருக்கு ஆசை விடவில்லை. மண்பாண்டங்களோடு வேறு ஏதாவது ஒரு பொருளையும் சேர்த்து விற்பனை செய்ய வேண்டும் என்று எண்ணினார். அதன் விளைவு?

ஒரு நாள் அந்த இடத்தில் அழகிய ரப்பர் செருப்புகள் காணப்பட்டன. பல வண்ணங்களில் ஆண், பெண், குழந்தைகளுக்கான அழகிய செருப்புகள் - அதாவது காலணிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அத்தோடு வழக்கம் போல மண்பாண்டங்களும் இருந்தன.

மண்பாண்டங்களை விட காலணிகள் அதிக அளவில் விற்பனை ஆயின. தையற்காரருக்கு ஆசை இன்னும் அதிகமாகியது. காலணியோடு வேறு ஏதாவது ஒரு பொருளையும் சேர்த்து விற்றால் இரட்டிப்பு வருமானம் கிடைக்குமல்லவா? என்று பழையபடி எண்ணினார்.

ஒரு நாள் அந்த இடத்தில், காலணிகளோடு ரெடிமேட் சட்டைகள் காட்சியளித்தன. சிறுவர் மற்றும் பெரியவர்களுக்கென்று விதவிதமான சட்டைகள் குவிக்கப்பட்டு இருந்தன. சட்டைகள் மூன்று ரூபாய்க்கும், ஐந்து ரூபாய்க்கும் கிடைத்தன. கண்ணைப் பறிக்கும் வண்ணங்களில் அவை இருந்தன. இப்போது அங்கு காலணிகள், சட்டைகள் மட்டுமே இருந்தன. சட்டி பானைகள் இல்லை. சட்டைகள் பெருமளவில் விற்பனையாயின. தையற்காரருக்கு கை நிறையக் காசு கிடைத்தது. என்றாலும் ஆசை யாரை விட்டது?



இன்னும் என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த வேளையில், சட்டை வாங்கிச் சென்ற ஒருவர் கோபத்துடன் வந்து, "யோவ்!" இது என்னய்யா? கிழிந்த சட்டையைக் கொடுத்து ஏமாத்திட்டியே......" என்று அந்தப் புதிய சட்டையைப் பிரித்துக் காட்டினார்.

அதற்குத் தையற்காரன் சமாதானம் சொல்வதற்குள், இன்னொருவர் சைக்கிளில் வந்து, "யோவ்! ராத்திரியிலே கண்ணு தெரியாதுன்னு தையல் பிரிஞ்ச சட்டையை என் தலையிலே கட்டிட்டியா?'' என்று கத்த ஆரம்பித்தார். அதற்குள் தெருவில் போவோர் வருவோர் கூட்டமாய்க்கூட ஆரம்பித்து விட்டார்கள். அப்போது ஒரு அம்மா தன் குழந்தையுடன் அங்கே வந்தார். "ஏய்யா! இது கவுனாய்யா... போட்டதும் கிழிஞ்சு போச்சே!" என்று கத்தினார்.

தையற்காரருக்குத் தலையே சுற்றியது.

"இந்நேரம் தையல் மிஷின் இருந்திருந்தா, உங்க சட்டையையெல்லாம் இப்பவே தைச்சித் தாரேன்னு சமாளிச்சிருந்திருக்கலாமே... புத்தி இல்லாம அந்தத் தையல் மிஷினையும் வித்துட்டேனே. அதிக ஆசை அதிக நஷ்டமுன்னு இப்பத்தானே புரியுது...'' என்று தையற்காரர் தலையில் கைவைத்துக் கொண்டு ஏங்கினான்.

எந்தத் தொழிலாக இருந்தால் என்ன? அதைக் கொண்டே முன்னேறலாமே! விடாமுயற்சி, கடின உழைப்பு இருந்தால் வாழ்க்கையில் எவரும் முன்னேறலாம். ஆசை இருக்கலாம்; தப்பில்லை; பேராசைதான் கூடாது. பேராசை பெரு நஷ்டம் அல்லவா?

பி.வி. கிரி

# மாணவர் பக்கம்




- பாவலர் இரா.சுப்பிரமணியன்

அழகாய் நூல்கள் அடுக்கியிருக்கும்
அமர்ந்து படிக்க இடமிருக்கும்
பல்துறை நூல்கள் பலவிருக்கும்
படிப்பவர் கூட்டம் மிகுந்திருக்கும்!
நாட்டின் நிலைமை நாமறிய
நாளிதழ் அங்கு வந்திருக்கும்
கிழமை மாத இதழுண்டு
கேட்டால் கொடுக்க ஆளுண்டு!
நூலகம் நல்ல நண்பன்தான்
நுணுகிப் படிப்பவர்க் கின்பம்தான்
உயர்நிலை அளிக்கும் நூலகமே
ஒளிபெறும் அதனால் நம்மகமே!

# அறிவுச் சுடர்

சர். சி.வி. ராமன் கண்டு பிடித்தது -
ராமன் விளைவு.

ஒரு குதிரைத் திறன் என்பது - 746 வாட்ஸ்.

சாணக்கியர் எழுதிய நூல் எது?
அர்த்தசாஸ்திரம்.

முந்திரி அதிகமாக விளையும் மாநிலம் -
கேரளா.

முதல் உலகமகா யுத்தம் துவங்கிய ஆண்டு -
1914.

புகையிலை அதிகமாக விளையும் மாநிலம் எது?
ஆந்திரா.

'கலிங்கத்துப்பரணி' இயற்றியவர் -
ஜயங்கொண்டார்.

உலகின் மிகப் பெரிய தீவு -
கிரின்லாந்து.



நெருப்பணைக்கும் வாயு -
கார்பன்-டை ஆக்ஸைடு.

இந்தியாவின் தேசிய மிருகம் -
புலி.

இந்தியாவின் தேசியப் பறவை - மயில்.


குஜராத்தின் தலைநகரம் -
காந்திநகர்.

பரிணாமக் கொள்கையை உருவாக்கியவர் - டார்வின்.

மிகப் பெரிய பாலூட்டி எது?
திமிங்கிலம்.

மிக மெதுவாகச் செல்லும் பிராணி - நத்தை.

இந்தியாவில் முதல் திரைப் படத்தைத் தயாரித்தவர் -
சாந்தாராம்.



அதிக மக்கள் தொகை உள்ள நாடு - சீனா.

தமிழகத்தின் அணுமின் நிலையம் - கல்பாக்கம்.

மக்கள் தொகை குறைவாக உள்ள மாநிலம் -
சிக்கிம்.

கல்லணை கட்டியது யார்?
கரிகால்சோழன்.

மிகப் பெரிய சமுத்திரம் எது?
பசிபிக் மகா சமுத்திரம்.

பீகாரின் தலைநகரம் எது?
பாட்னா.


ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சன்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927


தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23





